அக்ஷயாவின்

அழகிய

# நந்தினி

பெண்கள் மாத இதழ்

₹10



# கண்ணே... கலைமானே..!

## அகிலா கோவிந்த்

# கண்ணே கலைமானே...!

காதுகளில் சிறிய பிளாஸ்டிக் தொங்கட்டான்களை மாட்டிக்கொண்டு கண்ணாடியில் பார்த்தாள் நிர்மலா. தலையை மெல்ல அங்கும் இங்கும் அசைத்தபோது அவளது அழகிய விழிகள் சற்று அகல விரிந்தது.

**அகிலா கோவிந்த்**

அவள் எதிர்பார்த்த அடக்கமான அமர்த்தலான அழகு அப்படியே இருந்தது.

புன்னகையுடன் எழுந்தவள் ஹேண்ட் பேக்கையும், சர்டிஃபிக்கேட்டுகள் அடங்கிய ஃபைலையும் எடுத்துப் பத்திரப் படுத்தியவாறு கிளம்பினாள்.

அப்பா பார்த்துப் பார்த்து கட்டிய அந்த சிறு வீட்டின் சிறு ஒப்பனை அறையைவிட்டு வெளியே வந்தபோது தங்கை சுபா எதிர்பட்டாள்.

அக்கா, இண்டர்விதீவா...? என்றாள் கண்கள் மின்ன.

நிர்மலா பெரிதாய் தலையசைக்க, ஆல் த பெஸ்ட் என வேகமாய் அவள் கைகளைப் பிடித்துக் குலுக்கினாள். ப்ளஸ் டூ படிக்கும் பிரிய தங்கையின் அன்பை எண்ணி நெகிழ்ந்தவள் அவள் தலையை செல்லமாய் ஒரு தட்டி தட்டியவாறு முன்புறம் வந்தாள். அம்மா தயாராய் கோயில் பிரசாதத்துடன் நிற்க, அம்மாவிடம் ஆசீர்வாதம் வாங்கி நெற்றியில் சின்ன விபூதித் திலகத்துடன் அவள் கிளம்பியபோது மணி ஒன்பதைத் தொட்டிருந்தது.

பத்து மணிக்கு இண்டர்விதீ. என தெரிவித்திருந்தார்கள்.

மினர்வா கன்சல்டன்ஸி எனப்படும் நகரின் பெரிய வர்த்தக நிறுவனம் இது.

பஸ் பிடித்து, அரை மணிநேர அலுக்காத பயணத்தோடு ஒப்பனை கொஞ்சமும் கலையாமல் ஸ்டாப்பிங்கில் இறங்கி அவள் நடந்தபோது எதிரே பிரும்மாண்டமான மினர்வா டவர்ஸ் தெரிந்தது.



நடையின் வேகத்தைக் கூட்டியவள் கண்கள் படபடக்க தலை சாய்த்து அந்தக் கட்டிடத்தையே உற்றுப் பார்த்தாள்.

அகன்ற சலவைக் கல் என்று சொல்லப்படும் மார்பிள் பளபளப்பில் அந்த ஐந்து மாடிக் கட்டிடம், நவீன டிசைனிங் வேலைப்பாடுகளுடன் பிரமிக்க வைக்கும் அலங்கார முகப்புடன் இருந்தது.

இங்கு வேலை கிடைத்து, தினம் தினம் இங்கு வந்து வேலை பார்த்தால் எப்படி நன்றாக இருக்கும் என நினைப்பு ஓடும்போதே புன்னகையும் இதழ்களில் ஓடியது.

எம்.பி.ஏ. டிகிரியை வாங்கிக் கொண்டு வேலைக்காக இப்படித்தான் ஒவ்வொரு முறை இண்டர்விதீ போகும்போது நினைப்பது வாடிக்கையாய் இருக்கிறது. இது பத்தாவது முறை இம்முறையாவது...?

படபடவென கிரானைட் படிகளில் குதி நடையுடன் ஏறியவள் அதே விரைவுடன் நடந்து ரிசப்ஷனை நெருங்கினாள்.

ரிசப்ஷன் பெண் ரெடிமேட் புன்னகையுடன் அவளுக்கு வழிகாட்டினாள். லிப்ட் வழியாக இரண்டாவது ப்ளோரை அடைந்து நடந்தாள். வரிசையான பாலிமர் இருக்கைகளுடன் இண்டர்விதீ ஹால் தெரிந்தது.

அவளைப் போலவே மூன்று நான்கு பெண்கள் கூடவே ஐந்து ஆண்கள் நிர்மலா மெல்லிய புன்னகை படர இருக்கையொன்றில் போய் அமர்ந்தபோது எல்லாரும் நிமிர்ந்து அவளை ஒரு பார்வை பார்த்தனர் திரும்பிக் கொண்டனர்.

ஒரு சிறு புன்னகைக்கூட இவர்களுக்கு வராதா என

ஏமாற்றத்துடன் தோளைக் குலக்கியவாறு திரும்பியபோது தான் நிர்மலா முதன் முதலாய் அவனைப் பார்த்தாள்.

சற்றுத் தள்ளிய இருக்கையொன்றில் அவனுக்கு மற்றவர்களிடமிருந்து விலகி அமர்ந்தபடி முகத்தில் தீவிர சிந்தனையுடன் அவன்.

நிர்மலா சற்றே அவனை உற்றுப் பார்த்தாள்.

நெடு நெடு உயரம். சுருளான முடி தவழும் பரந்த நெற்றி. முறுக்கி விடப்பட்டிருக்கும் அடர் மீசை, வேல் விழியாய் குத்தும் கருவிழிகள். ஆஜானுபாகுவான உடற்பயிற்சி உடம்பு ஒருவித வசீகரத்தன்மையுடன் மற்ற ஆண்களிடம் இருந்து மாறுபட்டிருந்தது அவனது சுபாவம். நிர்மலாவை கவனிக்க வைத்தது.

நிர்மலா அப்படி பார்த்துக் கொண்டிருந்தபோது அவனும் சட்டென தற்செயலாய் திரும்பியவன் நிர்மலாவைப் பார்த்து விட்டான். அவனது வேல்விழி கருவிழிகள் அப்படியே நிர்மலாவை ஊசியாய் துளைத்தது. அவனது இறுக்கமான உதடுகள் தளர்ந்து மெல்லிய சிரிப்பு உதிர்த்தது.

நிர்மலா பதிலுக்கு ஸ்னேகமான சிரிப்பு செய்தாள். அவன் புன்னகை விலகாமலே அங்கிருந்து எழுந்து நிர்மலாவின் பக்கத்து இருக்கைக்கு வந்தான். கண்களாலே அனுமதி பெற்று உட்கார்ந்தான். ஐ ஆம் சரவணன்... என்றான்.

ஐ ஆம் நிர்மலா... என்றாள் நிர்மலா பதிலுக்கு.

அவனது அடுத்த கேள்வியே அவளைத் திடுக்கிட வைத்தது.



இந்த இண்டர்வியூவை அட்டெண்ட் செய்யப் போகிறீர்களா மிஸ் நிர்மலா?

அவள் நிமிர்ந்து புதிராய் பார்த்தாள்.

அதற்குத்தானே வந்திருக்கிறேன். என்ன கேள்வி இது?

அவன் தோள்களை அசட்டையாய் குலுக்கினான்.

நோ.... திஸ்... இந்த இண்டர்வியூ வெறும் கண் துடைப்புதான் ஏற்கனவே ஆட்களைத் தேர்ந்தெடுத்து விட்டார்கள்....

நிர்மலா தலை சாய்த்து அவனைப் பார்த்தாள்.

உங்களுக்க எப்படித் தெரியும்?

நன்றாகத் தெரியும் என்னிடமும் பேரம் பேசினார்கள். ஐந்து லட்ச ரூபாய் கொடுத்தால் வேலையைத் தருவதாய் உதவி மானேஜர் மூலம் சொல்லிப் பார்த்தார்கள். நான் மறுத்து விட்டேன்....

இது நான் கேள்விப்படாத ஒன்றாய் இருக்கிறதே...?

கேள்விப்படாத ஒன்றுதான். ஆனால் சிறிது நேரத்தில் இண்டர்வியூவில் உங்களிடம் கேட்கப்படும் கேள்விகளைப் பார்த்தால்.... நான் சொன்னது உண்மை என்று புரிந்து விடும்...

அப்படி என்ன கேட்கிறார்கள்?

நிர்மலா மறுபடியும் கண்கள் விரிய பார்க்க அவனது பார்வை தீர்க்கமானது.

இதுவரை மூன்று பேர் உள்ளே சென்றுவிட்டு

வெளியேறினார்கள். அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்வி பெரும் நகைப்புக்குரியது....

அப்படி என்ன நகைப்பாய்... சொல்லுங்கள், பார்ப்போம்.... நிர்மலா காது மடல்கள் அதிர கேட்க பதிலுக்கு அவனும் வேகமாய் தலையசைத்தான்.

சொல்கிறேன்... மண்டோதரி யார்? யாருடைய மகள் அவள் என்று கேட்டிருக்கிறார்கள் தெரியுமா?

என்ன சொல்கிறீர்கள்.... மண்டோதரி பற்றியா?

நிர்மலா வாய் பிளக்கும் அதிசயத்துடன் திகைக்க அவன் புன்முறுவலோடு தொடர்ந்தான்.

இதே.... இதேதான் உங்களுக்கு ஏற்படும் இந்த வியப்புதான் எனக்கும் ஏற்பட்டது. இராமாயண, ராவணன் மகள் மண்டோதரிக்கும் எம்.பி.ஏ. படித்து விட்டு மார்க்கெட்டிங் ஆபீஸ் வேலையைத் தேடி வந்திருக்கும் நமக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? வேண்டுமென்றே நக்கலடிப்பது போல் இப்படியெல்லாம் கேட்கிறார்கள். அதனால்தான் கேள்விப்பட்ட பணவிஷயம் உண்மை என்று நம்பத் தோன்றுகிறது....

அவன் சொன்ன அனைத்தையும் கேட்டுக் கொண்டு நர்மலா பேசாமல் இருந்தாள்.

என்ன யோசிக்கிறீர்கள்... இன்றும் இண்டர்வியூவிற்காக உள்ளே செல்லலாம் என்று தோணுகிறதா? இல்லை செல்ல வேண்டாம் என்று தோணுகிறதா... இல்லை ஒரேயடியாய் குழப்பமாக இருக்கிறதா?

நிர்மலா மேலும் மௌனம் சாதிக்க அவன் தொடர்ந்தான்.



எதுவானாலும் சரி, மிஸ், நிர்மலா நான் இப்படி விளக்கம் சொல்லித் தடுப்பதற்கு இன்னொரு முக்கிய காரணமுமிருக்கிறது. அதையும் சொல்லிவிடட்டுமா? என்றான்.

நிர்மலா புதிராய் நிமிர்ந்தாள்.

என்ன காரணம்... சொல்லுங்கள் என்றாள்.

அது..... அது... காரணம் என்றுகூட சொல்ல முடியாது. ஒரு ஐடியா.... வித்தியாசமான முயற்சி என்றுகூட சொல்லலாம். இங்குள்ள அனைவரிடமும் அதுபற்றி கேட்டு விட்டேன். யாருக்கும் துணிச்சல் இல்லை. வாழ்க்கையில் ரிஸ்க் எடுக்கும் தைரியமில்லை நீங்களாவது...

அவன் வார்த்தைகளை முடிக்கும் முன் அவள் குறுக்கிட்டாள்.

அது என்ன வித்தியாசமான முயற்சி? முதலில் அதைச் சொல்லுங்கள்... என்றாள்.

அவள் காட்டிய ஆர்வத்தில் அவன் புருவம் உயர்ந்தது.

ஆர்வமாய் தன் முகத்தை முன்னால் கொண்டு வந்தான்.

மிஸ் நிர்மலா... நமது எம்.பி.ஏ. படிப்பிற்கு பேங்கில் மூன்று லட்ச ரூபாய் லோன் தருகிறார்கள். இப்படி ஐந்தாயிரம் ஆறாயிரம் சம்பள ரூபாய்க்காக நாயாய் நாம் ஒவ்வொரு பில்டிங்காய் படியேறி அலைந்து திரிவதை விட, நாம் இருவரும் சேர்ந்து... அதாவது பேங்க் லோன் மூலம் இருவருக்கும் கிடைக்கும். ஆறு லட்ச ரூபாய் முதலீட்டில் சொந்தமாய் ஒரு கன்சல்டன்ஸி நிறுவனத்தைத் தொடங்கி




நிர்மலா ஒரு கணம் அதிசயித்துதான் போனாள்.

அவன் கேட்டது சரியான கேள்வி.

எல்லோரும் வேலை வேலை என்று அலைந்து கொண்டு மாதச் சம்பளத்திற்காக குண்டு சட்டியிலே குதிரை ஓட்டிக் கொண்டிருந்தால் எப்படி? கொஞ்சம் வித்தியாசமாய் தன்னம்பிக்கையுடன் முயற்சி எடுத்துப் பார்த்தால் என்ன?

இது அவளுக்குள் அடிக்கடி எழுந்த சிந்தனைதான். அப்படி சிந்தனை எழும்போதே நாமாவது தனியே தொடங்குவதாவது... என்ற பயமான சாக்குப் போக்குடன் எண்ணத்தை நிறுத்திடுவாள்.

ஆனால் இன்று?

அவன் கேட்ட கேள்வி சத்தான டானிக்கை குடித்தது போல் அவளுள் உற்சாகத்தைக் கிளப்பியது.

என்ன சொன்னீர்கள்? என்றாள் திரும்பவும்.

அவள் ஆர்வமாகிவிட்டதை உயர்ந்த அவனும் விளக்கமாய் கதை போல் சொல்ல ஆரம்பித்தான்.

இதோ பாருங்கள் மிஸ். நிர்மலா, நான் வெறும் பேச்சாக



இதையெல்லாம் சொல்லவில்லை. பிராஜக்ட் ரிப்போர்ட் போல் சொந்தமாய் கன்சல்டன்ஸி ஒன்று தொடங்க தேவைப்படும் விஷயங்களை எல்லாம் ரெடி செய்து எழுதி வைத்திருக்கிறேன். முதலில் இந்த ஃபைலைப் பாருங்கள். உங்களுக்குப் புரியும்... என்றபடி கையிலிருந்த இரண்டு ஃபைல்களில் ஒன்றை நீட்டினான்.

நிர்மலா ஃபைலை வாங்கிப் புரட்டினாள்.

அவன் சொன்னது சரி.

சொந்தமாக கன்சல்டன்ஸி ஆரம்பிப்பதற்கு தேவையான திட்ட விபரங்கள். செலவுகள் என வரிசைப்படுத்தி விரிவான கணக்குகள் அதில் இருந்தது. மொத்த நிகரச் செலவு, தேவைப்படும் மூலதனம் என ஆறு லட்ச ரூபாயை கணக்கிட்டு சிவப்பு மையால் கோடிட்டிருந்தான்.

பார்த்தபடி நிமிர்ந்த அவளிடமும் அதையே சுட்டிக் காட்டினான்.

பாருங்கள், அதில் தேவைப்படும் மூலதனம் ஆறு லட்சம் என்று வருகிறதல்லவா... அதற்குத்தான் இன்னொரு பார்ட்னரை தேடிக் கொண்டிருக்கிறேன். உங்களுக்கு சம்மதம் என்றால்...

அவன் வார்த்தைகளை முடிக்காமல் இழுக்க நிர்மலா மறுபடியும் தலையைச் சிலுப்பியபடி பார்த்தாள்.

பேங்க் லோன் என்று சொன்னீர்களே... எப்படி மூன்று லட்சம் உடனே கிடைத்திடுமா? உங்களுக்கு நன்றாகத் தெரியுமா?

ம்ம்... கண்டிப்பாக கிடைத்துவிடும். என் தந்தையின்

நண்பர் ஒருவர்தான் பேங்க் மேனேஜராய் பணியாற்றி வருகிறார். அவரிடம் இது விஷயமாக நிறைய முறை பேசி விட்டேன். உரிய சர்டிஃபிகேட்டுகளையும், டாக்குமெண்ட்களையும் காட்டினால் உடனே சாங்ஷென் செய்து, பணம் கிடைக்க ஏற்பாடு பண்ணுவதாய் உறுதி கூறியிரக்கிறார்....

அவன் பேசி முடித்ததும் பெரிய அமைதி ஒன்று நிலவியது.

நிர்மலா கொஞ்ச வினாடிகள் கன்னத்தில் கை வைத்து தலைசாய்த்தவாறு அவனையே பார்த்தாள்.

அவனும் ஒரிரு நிமிடங்கள் மௌனமாகவே அவளைப் பார்த்தவன், புரிகிறது... என்றான்.

நிர்மலா புருவங்களை உயர்த்தினாள்.

புரிகிறதா...? என்ன புரிகிறது.....?

மிஸ் நிர்மலா நீங்கள்... என்று அவன் ஆரம்பிக்க நிர்மலா அருவையாய் முகத்தை வெட்டினாள்.

முதலில் இந்த மிஸ்ஸை நிறுத்துங்கள் நிர்மலா என்றே கூப்பிடுங்கள்....

ம்ம்.... சரி....

அவன் தலையசைத்தவாறு பற்களைக் காட்டினான்.

சரி... சொல்ல வந்ததைச் சொல்லுங்கள்...

ம்ம்... சொல்கிறேன், நிர்மலா நீங்கள் தயங்குவது யோசிப்பது புரிகிறது. திடுதிப்பென்ற இண்டர்வியூவிற்கு வந்த



இடத்தில் முன்பின் தெரியாத நான் சொல்வதை ஏற்றுக் கொள்வது முறையில்லைதான், ஆனால்....

சொல்லுங்கள்....

முன்பின் தெரியாத நான் தெரிந்தவனாகி விட்டால்....? என்றபடி அவன் நிறுத்திவிட்டு மறுபடியும் புன்னகை புரிய அவள் விசித்திரமாய் அவனைப் பார்த்தாள். அவன் சிரிப்புடன் தொடர்ந்தான்.

அதாவது நிர்மலா, முதலில் நீங்கள் என் வீட்டிற்கு வாருங்கள். என் தந்தையை என் பிரியமான அம்மாவை, கட்டித்டதங்கையை என எல்லோரையும் அறிமுகம் செய்து வைக்கிறேன். பின் நானும் உங்கள் வீட்டிற்கு வருகிறேன். உங்கள் தந்தையிடம் இந்த கன்சல்டன்ஸி பற்றி விரிவாய் பேசுகிறேன். இப்படி நம் இருவர் குடும்பத்திற்கும் பரஸ்பர அறிமுகம் ஏற்பட்டு விட்டால் நாம் ஒன்று சேர்ந்து பார்ட்னர்களாகத் தொழில் தொடங்க எவ்வித் பிரச்சனையும் இரக்காது. என்ன சொல்கிறீர்கள்....? எப்படி என் யோசனை?

அவன் சொல்வதைக் கேட்டு நிர்மலா அதிரவும் அதிசயிக்கவும்தான் செய்தாள்.

எவ்வளவு தெளிவாக யோசிக்கிறான். பேசுகிறான். எப்படி இது சாத்தியம்?

அவனது தீர்க்கமான பார்வை, உறதியான பேச்சு எல்லாமே அவளைத் தட்டிக் கழிக்க முடியாத நிலைக்கு கொண்டு போயிற்று.

இன்று என் வீட்டிற்கு வாருங்கள் நாளை உங்கள் வீட்டிற்கு வருகிறேன்... என்று அவன் சொன்னபோது

அவளையறியாமல் தலையை மேலும் கீழும் ஆட்டினாள்.

சரவணன் அத்தோடு நில்லாமல் ஒரு சிறு பேப்பரில் தனது விலாசத்தை குறித்து அவளிடம் நீட்டினான்.

சரியாக மாலை ஐந்து மணிக்கு உங்களை எதிர்பார்க்கிறேன்.... என்றபடி புன்னகையுடன் விடைபெற்றான்.

நிர்மலா பதிலுக்குப் புன்னகைத்தபடி விறுவிறுவென அகலும் அவனது நடையழகை வியந்து பார்த்தாள். அவளும் இனி இன்டர்வியூ தேவையில்லை என எழுந்து கொண்டாள்.

அன்று வீட்டிற்கு வந்து, மதிய உணவருந்தும் வேளையில் அப்பாவிடம் சொன்னபோது அப்பாவும் அதிசயிக்கத்தான் செய்தார்.

வேலை... வேலை... என்று அலைந்து திரிவதற்கு பதில் இப்படியொரு முயற்சி எடுப்பது நல்லதுதான். அவர் பெயர் என்ன சொன்னாய்? என்றார்.

ச... சரவணன் என்றாள் நிர்மலா. அப்படி அவன் பெயரை உச்சரிக்கும்போதே ஒருவித இனிமை புதிதாய் அவளுள் ஓடிற்று.

சரி... சரிம்மா... நீ இன்று அவர் வீட்டுக்குச் சென்று வா. அவர் விருப்பப்படியே நாளை அவரை நான் சந்தித்துப் பேசுகிறேன். எல்லாம் சரியாக எனக்கு திருப்தியாக அமைந்து விட்டால் நீ தாராளமாக அவருடன் சேர்ந்து கன்சல்டன்ஸி நிறுவனத்தைத் தொடங்கலாம். போதுமா... உனக்கு சந்தோஷம்தானே...?

தந்தையின் கேள்விக்கு பொங்கும் சிரிப்புடன் உற்சாகமாய் தலையசைத்து தனது மகிழ்ச்சிக்கு



வெளிப்படுத்தினாள் நிர்மலா.

அன்று மாலை ஐந்து மணிக்கு தங்கையின் மொபட்டை வாங்கியபடி சரவணனின் வீடு நோக்கி கிளம்பி விட்டாள் நிர்மலா.

சரவணனி வீடு நகரின் நாற்பாலையை ஒட்டிய மில்லர்பு காலனியில் இருந்தது. பத்து நிமிட பயணத்திற்கு வீட்டு விலாசத்தைக் கண்டுபிடித்து மொபட்டை நிறுத்தினாள்.

வாசல் கேட்புறம் கைவைத்டதபடிட தயாராய் அவளுக்காக காத்திருந்தான்.

நிர்மலா.... வாங்க என்றபடி வெளிர் நிற சட்டையில் பளீரென புன்னகைத்தான்.

அவனது அழகான வரிசைப் பற்களைப் பார்த்தவாறே பதிலுக்குப் புன்னகைத்தவள் வீட்டை நோக்கினாள்.

சிறிய வீடு என்றாலும் பளிச்சென சிறுசிறு அறைகளுடன் அழகாக இருந்தது முன்புறம் விஸ்தாரமான புல்தரை காற்றோட்டமான திறந்தவெளி, குரோட்டன்ஸ், மனி பிளாண்ட், ரோஜா என வீட்டைச் சுற்றி விதவிதமான செடிகள் வைத்து வெளிப்புறம் பூந்தோட்டம்போல் இருந்தது. உயரமான தென்னை மரங்களும், கிணற்றடியும் கிராமத்து சூழ்நிலையை அவளுக்கு உணர்த்தின.

எல்லாவற்றையும் ரசித்துப் பார்த்தபடி நிர்மலா நடக்க உள்ளிருந்து சிரித்தபடி பாவாடை தாவணியும், இரட்டைச் சடையுமாய் வெளிவந்தாள் தங்கை.

இதா... என் தங்கை நித்தியா. ப்ளஸ் டூ படிப்பில்,

குறும்பில் கட்டி... என அவளை அறிமுகப்படுத்தினான் சரவணன்.

வாங்க... என சிரிப்புடன் வரவேற்றவளின் கைகளைப் பிடித்துக் கொண்டு உள்ளே நடந்தாள் நிர்மலா. சரவணனின் தந்தை குருநாதர் ஓய்வு பெற்ற தமிழாசிரியர். தாய் அன்னபூரணி லட்சுமிகரமாய் இன்முகத்துடன் இருக்க எல்லோரையும் அறிமுகப்படுத்தினான் சரவணன்.

பதிலுக்கு கைகூப்பி நமஸ்கரித்தாள் நிர்மலா.

அவர்கள் எல்லோரையும் நிர்மலாவிற்கு பிடித்துப் போயிற்று. அவர்களுக்கும் நிர்மலாவைப் பிடித்துப் போய் விடாது பேசினர்.

அதிலும் சரவணனின் தங்கை நித்திலா நிர்மலாவையே சுற்றி வந்தாள்

நிர்மலா தன் நீளமான கூந்தலை உயர்த்தி வாரி க்ளிப்பிங் செய் டாப்ஸிடெயில் அலங்காரத்தை அக்கறையாய் கேட்டாள். தங்க நிற பூனம் சாரியில் புதுமலராய் பளிசிட்ட நிர்மலாவின் அழகும், தனிமையான அவளது வசிகரத் தன்மையும் நித்திலாவை ரொம்பவும் கவர்ந்தன.

ப்யூட்டி டிப்ஸ் எதாவது கொடுங்க..... என்று அவள் சொன்னபோது தன் முத்துப் பற்கள் தெரிய அடக்க முடியாமல் சிரிக்கத்தான் செய்தாள் நிர்மலா.

அந்த சிரிப்பில் சரவணனும் கலந்து கொண்டு, இல்லை நிர்மலா தங்கை கேட்பது சரிதான். நிஜமாகவே நீங்கள் அழகுதான்... என்றபோது அவளுக்கும் மெய்சிலிர்த்தது. கண்கள் தாழ வெட்கப்பட்டவள். சொல்லிய சரவணனின் முகத்தை



உற்றுக் கவிவனித்து அவனும் நிஜமாகத்தான் சொல்கிறான் என்பதை யறிந்தபோது சொக்கித்தான் போனாள் அவள்.




மறுநாள் முன்பே திட்டமிட்டபடி சரவணனம் வீட்டிற்கு வந்து நிர்மலாவின் தந்தையை சந்தித்தான். சொந்த கன்ஸல்டன்ஸி தொடங்குவதற்கான ஆவணங்களை மதிப்பிட்டு விபரங்ளை எல்லாம் காட்டி விவரமாகப் பேசினான்.

நிர்மலாவின் தந்தை ரகுராமிற்கு சரவணனை ரொம்பவும் பிடித்துப் போயிற்று. உடன் நீங்கள் இருவரும் சேர்ந்து நிறுவனத்தைத் தொடங்குகங்கள் என பச்சைக் கொடி காட்டி விட்டார்.

அடுத்தாற்போல் இருவரும் பேங்க் மேனேஜரை ன்று சந்தித்தார்கள். தேவைப்படும் பாரங்களை எல்லாம் பூர்த்தி செய்து கொடுத்தார்கள். ஒரு வாரத்தில் லோன் சாங்ஷன் ஆகி பணம் வந்துவிடும் என மேனேஜர் கூற மகிழ்ச்சியோடு அவரிடம் விடைபெற்று வெளிவந்தனர்.

நிர்மலா வெளிவந்தவள் யோசனை தோன்ற சரவணனையே பார்த்தாள்.

என்ன நிர்மலா?

லோன் ஓ.கே.யாயிற்று. இடம்.... அலுவலகம் எங்கு வைப்பது சரவணன்?

அதற்கும் இடம் பார்த்து ரெடியாய் வைத்திருக்கிறேன்... நிர்மலா. என் நண்பன் ஒரவனுக்குத் தெரிந்த ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் ஒன்றில் ஒரு சிறிய அறையைச் சொல்லி வைத்திருக்கிறேன். அதையும் பார்த்து விடுவோமா?

நிர்மலா தலையாட்டினாள்.

இருவரும் ஆட்டோ பிடித்து பத்து நிமிட பயணத்திற்குப் பின் அந்த ஷாப்பிங் காம்ப்ளெக்ஸை அடைந்தனர். சரவணன் சொல்லிய அறை முதல் ப்ளோரில் கீழ்தளத்தை ஒட்டி இருந்தது. அதற்கும் சம்மதம் சொன்னாள்.

அறையின் வாடகை மூவாயிரம் என்பது அவளை வாய் பிளக்க வைத்து பயத்தைக் கொடுத்தது. முடியுமா சரவணன்... மாதா மாதம் மூவாயிரம் கொடுத்து.... எவ்வித அனுபவமும் இல்லாமல் நம்மால் தாக்குப் பிடிக்க இயலுமா? என்றாள் சந்தேகத்துடன்

அவளது சந்தேகத்திற்கு ரெஸ்டாரண்ட் ஒன்றில் உட்கார்த்திவைத்து நீண்ட லெக்சர் கொடுத்தான் சரவணன்.

இதோ பார் நிர்மலா, முதலில் நம் மீது நமக்கு அளவு கடந்த நம்பிக்கை வேண்டும். நம்பிக்கை வைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் ஜெயிக்க முடியும்... என்றான்.

சரி வைத்துக் கொள்கிறேன்... என்றாள் நிர்மலா.

அடுத்தாற்போல் நாம் செய்யும் கன்ஸல்டன்ஸி தொழில் அதைப்பற்றி, அதில் முக்கியமாக நாம் செய்யப் போகும் ஒரு விஷயத்தை உகனக்குத் தெளிவுப்படுத்துகிறேன்....

சொல்லுங்கள்...



நமது கன்ஸல்டன்ஸியின் முக்கிய வேலையே பெரிய சிறிய தொழில் நிறுவனங்களுக்க திட்ட அறிக்கையை உரவாக்கி கொடுப்பதுதானே...?

ஆ.....மா.....ம்.....

அந்த்தத்திட்ட அறிக்கையே நாம் தயாரித்து கொடுக்க... ரொம்ப குறைந்த அளவு தொகையையே சர்வீஸ் சார்ஜாக் நாம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே என் ஐடியா ஏனென்றால் இப்போது நன்றாக இயங்கி வரும் கன்ஸல்டன்ஸி நிறுவனங்கள் எல்லாம் அதிகப்படியான கட்டணத்தை வசூலித்து வருகின்றன. அவர்களுடன் போட்டி போட வேண்டுமென்றால் நாம் குறைத்துதான் கட்டணத்தை வைக்க வேண்டும்.. மேலும்....

சொல்லுங்கள்...

நமது நிறுவனத்திற்கு க்ளையண்ட்களைப் பிடிக்க பெரிய நிறுறுவனங்களை குறி வைக்காமல், புதிதாய் சந்தையில் இறங்கும் சிறுசிறு நிறுவனங்களை குறி வைத்:து இயங்க வேண்டும் என்பதே எனது திட்டம். அப்படி சிறு நிறுவனங்களுக்கு தேவையான விபரங்களை திட்ட அறிக்கைகளை சரியாக நாம் செய்து கொடுத்தால் அவர்களுக்கு மட்டுமல்ல.... நமக்கும் பெரிய வளர்ச்சி ஏற்படும்.. நல்ல பெயர் கிடைக்கும்....

அப்படி நிஜமான திட்ட அறிக்கையைக் கொடுத்தால் நமது கிளையண்டிற்கு அவர்களது புதிய தயாரிப்பான மலர் சோப்பை சந்தைப்படுத்த எளிதாய் இருக்கும். மேலும் நமது திட்ட அறிக்கை சரியான கணிப்பாய் இரந்தால் அந்த வழி முறைகளைப் பின்பற்றி அவர்களும் மார்க்கெட்டிங் செய்து விற்பனையில் வெற்றி பெற்றுவிட்டால் அது அவர்களுக்கு

மட்டுமல்ல... நமக்கும் வெற்றிதானே...?

அதேதான் எனது பாயிண்ட்டும்... என்றாள் நிர்மலா முழு உற்சாக குரலிலட

ம்ம்... நல்லது நிர்மலா... இன்றும் இரண்டொரு நாளில் அந்த அறையை நம் அலுவலகமாய் மாற்றி ஏற்பாடு செய்து விடுகிறேன். அதற்குப் பின் நாம் நமது பணியைத் தொடங்கி கடுமையாக உழைக்க ஆரம்பித்து விடுவோம்... என்றான்.

அடுத்து வந்த சில தினங்களில் அலுவலகம் ரெடியாகி கன்ஸல்டன்ஸிக்கு என்ன பெயர் வைப்பது என்ற விவாதம் வந்தது.

அவனும் தன் பங்குக்கு ஏதேதோ பெயர்களை யோசித்தான். பின் சரவணனே யோசனையுடன் சிந்தித்து நிமிர்ந்தவன், வேண்டுமானால் நிம்மி என்று வைத்துக் கொள்வோமா? நிம்மி கன்ஸல்டன்ஸி பெயர் எப்படி இரக்கிறது? என்றான்


நிர்மலாவுக்கும் அந்தப் பெயர் ரொம்பவும் பிடித்திருந்தது. ஏனென்றால் அவளை வீட்டில் எல்லோரும் அழைப்பது நிம்மி என்றுதானே? அதையே சரவணன் உச்சரிக்கும்போது அவளையறியாமல் பரவசம் ஏற்பட்டு திக்குமக்காட வைத்தது. வீட்டில் தன்னை அப்படி அழைப்பது சரவணனு;குத் தெரிந்திருக்குமோ என்று கூட சந்தேகித்தாள்.

என்ன நிர்மலா நிம்மி கன்ஸல்டன்ஸி என்றே வைத்து விடுவோமா? என திரும்பவும் சரவணன் கேட்கவும் வெட்கம்



பொங்கவே தலையசைத்தாள் நிர்மலா.

ஆனால் கன்ஸல்டன்ஸி திறப்பு விழாவின்போது சரவணனின் தங்கை நித்தியா நிர்மலாவின் பக்கம் வந்தவள், என்ன அலுவலகப் பெயர் நிம்மி கன்ஸல்டன்ஸியா? அண்ணன் இன்னும் நிம்மிறை மறக்கவில்லை போலவே... என்றபோது நிர்மலா அதிர்ந்துதான் போனாள்.




நிர்மலாவுக்கு நித்திலாவுக்கு நித்திலா சொன்ன விஷயம் உறுத்திக் கொண்டிருந்தாலும் அடுத்து வந்த சில நாட்கள் அது பற்றியெல்லாம் சரவணனிடம் கேட்க முடியாதபடி சூழ்நிலை இருந்தது.

நிம்மி கன்ஸல்டன்ஸி என்ற அழகான பெயர்ப் பலகையுடன் நிறுவனம் தொடங்கிய முதல் நாள் முதலே, வேலைகளிலும் சுறுசுறுப்பு காட்ட வேண்டியிருந்தது. சரவணன் தன் வீட்டிலிருந்து கம்ப்யூட்டர் சிஸ்டத்தைக் கொண்டு வந்து அலுவலகத்தில் பொருத்தினான்.

நிர்மலா அதில் நகரின் அத்தனை வியாபார, தொழில் நிறுவனங்களின் பெயரையும் முகவரியும் லோட் செய்ய வேண்டியிருந்தது. சரவணன் அறிவுறுத்தலின்படி அந்த நிறுவனங்களுக்கு நிம்மி கன்ஸல்டன்ஸி பற்றிய விபரங்களை எல்லாம் இமெயில் வழியாக மெஸேஜும் அனுப்பி வைத்தாள்.

சரவணன் அத்தோடு விடவில்லை. நிர்மலா, நாம் தினம்

இரண்டு மணி நேரம் ஒதுக்கி பெரிய பெரிய தொழில் நிறுவனங்களை நேரிடையாய் சந்திக்க வேண்டும் என்றான்.

எதற்கா? என்றாள் நிர்மலா புரியாதவளாய்.

சரவணன் சிரித்தான்... என்ன நிர்மலா இப்படிக் கேட்கிறாய்? கடையை விரித்தாயிற்று. வியாபாரம் செய்ய வேண்டாம். நமக்கு கிளையண்ட்ஸ: எனப்படும் வாடிக்கையாளர்களை பிடிக்க வேண்டும். அதற்கு சில உத்திகளையும் நாம் கையாள வேண்டும். புரிகிறதுதானே?

சரவணன் சொன்னதோடு நிற்காமல் மறுநாளே அவளை கூட்டிக்கொண்டு இரண்டு மூன்று தொழில் நிறுவனங்களுக்குச் சென்றான். கம்பெனியின் மானேஜிங் டைரக்டர், சிஇஒ என பெரிய பெரிய அதிகாரிகளுடன் லாவகமாய் பேசும் அவன் திறமையைக் கண்டு நிர்மலா வியக்கத்தான் செய்தாள்.

எவ்வளவு லாவகமாய் சாதுர்யமாய் பேசி ஆர்டர் பிடித்தீர்கள். இந்த அறிவு, இந்த சாதுர்யம் நிச்சயமாய் எனக்கு இல்லை சரவணன்... என்றாள் வியப்பு நீங்காமல் சரவணன் தோள்களை குலுக்கியபடி சிரித்தான்.

நிர்மலா... நா சொந்தமாய் ஒரு கன்ஸல்டன்ஸி நிறுவனம் தொடங்க வேண்டும் என எவ்வளவு வெறியாய் அலைந்தேன் தெரியுமா? எத்தனை பேர்களிடம் பார்ட்னராக சேருவது பற்றி பேசியிருப்பேன் தெரியுமா? யாரும் செவு சாய்க்கவில்லை, எல்லோரும் மாதவேலை, சம்பளம் என ஒரு குறுகிய வட்டத்திலேயே ஓட விரும்பினார்கள். ஆனால் நீ... நீங்கள் ஒருவர்தான் துணிச்சலாய் நின்று சம்மதம் சொன்னது. அதனால் உங்களுக்குத்தான் எனது நன்றியை முதலில் சொல்லியாக வேண்டும்... நன்றி... நிர்மலா..... என்றபோது நிஜமாகவே அந்தப்



புகழுரையில் மெய்சிலிர்த்தது நிர்மலாவுக்கு.

முன் நெற்றியில் தலைமயிர் கேசம் படர அழகாக புன்னகைத்தபடி பேசும் அவனை கண்கொட்டாமல் பார்த்தாள். அவளை அவன் மரியாதை கொடுத்து பேசுவது உறுத்தவே... அதையும் சொல்லிவிட்டாள் நிர்மலா.

இந்த நீங்க... போங்களை விடுங்கள் சரவணன். ஒருமையிலே அழையுங்கள். அதுதான் நன்றாக இரக்கிறது.... என்றாள்.

சரவணன் அதற்கு புன்னகையோடு சம்மதித்தவன் தொடர்ந்து, நிர்மலா இன்னொரு முக்கியமான விஷயம் உன்னிடம் சொல்ல வேண்டும். நான் இவ்வளவு நாள் சொல்லாமல் இருந்ததே தப்பு. சொல்லிவிடட்டுமா? என்றபோது நிர்மலாவிற்கு மனதில் ஏதோ நெருடியது நிமிர்ந்து அதிசயமாய் அவனைப் பார்த்தாள்.

என்ன விஷயம் சரவணன்?

நான் இப்படி வெறியாய் அலைந்து நமது சொந்த பிஸினஸ் முயற்சியில் எப்படியும் வெற்றி பெற்று விட வேண்டும் என துடிப்பதற்கு நிஜமாய் இன்னொரு காரணமும் இருக்கிறது நிர்மலா....

காரணமா? என்ன காரணம் சரவணன்?

நிர்மலா கேட்டதும் சரவணனின் முகம் மெல்ல மாறியது.


ஒரு பெண். அவள் பெயர் நிம்மி.... அவள்தான் காரணம்....

முகம் இறுக சரவணன் சொல்ல திகைத்துப் போனவளாய்

அவனையே உற்றுப் பார்த்தாள் நிர்மலா.

நிம்மியா...? யார் அந்த நிம்மி சரவணன்?

நிம்மி... என் காதலி.... என்றான் சரவணன் நீளமான மூச்சுடன் அவளை அதிர வைத்தபடி.




நிம்மி என் காதலி... என்று சர்வ சாதாரணமாய்ச் சொன்னான் அவன். அவன் நிம்மி என அழுத்தமாய் உச்சரித்த விதமும், காதலி என பாசப் பரிவாய் விளித்த விதமும் அவளை அதிர்வோடு திடுக்கிடச் செய்தது.

அப்படியே கண்கொட்டாமல் அவனைப் பார்த்தாள். இந்தக் காதலி கன்றாவி வேறு... என அவள் எரிச்சல்பட அவன் அதை உணராமல் கதை போல் சொல்ல ஆரம்பித்தான.

அது... ஒரு பெரிய கதை நிர்மலா... விரிவாகச் சொல்கிறேன்... என்ற தொடங்கியவன், நிர்மலா நான் எம்.பி.ஏ. படிப்பு முடிந்ததும் முதன் முதலாய் மேனேஜ்மெண்ட் ட்ரெய்னியாக ஆறு மாதங்கள் ஒரு கம்பெனியில் வேலை பார்த்தேன். அந்தக் கம்பெனியின் பெயர் ஆர்.கே.கார்மெண்ட்ஸ். அந்த நிறுவனத்தின் முதலாளிதான் இந்த நிம்மி....

அவன் நிறுத்த.... அவசரமாய் குறுக்கிட்டு, அப்படி யானால் முதலாளியையா காதலித்தீர்கள்? என்றாள் சற்று கேலி பொங்க.



பதிலுக்கு அவன் சீரியஸாய், காதலித்தேன் இல்லை நிர்மலா காதலித்தோம் என்றுதான் சொல்ல வேண்டும் என வார்த்தைகளைத் திருத்த அவளுள் எரிச்சல் கூடவே செய்தது.

அப்படியானால்.... என்ன கண்டதும் காதலா? என்றாள் மீண்டும் அதே கேலி செய்யும் கோபத்தில்.

அதற்கு மறுப்பு செய்யாமதல் பலமாய் தலையாட்டினான் சரவணன்.

கரெக்ட்டாகச் சொல்லிவிட்டாய். அதேதான் நிர்மலா இருவரும் ஒருவரையொருவர் பார்த்த அந்த முதல் சந்திப்பில்... முதல் கணத்தில்.... எங்களுக்குள் என்னவோ ஆகிவிட்டது. பயங்கர ஈர்ப்பு ஏற்பட்டு மனதை பறிகொடுத்து விட்டோம். காதல் என்றால் அப்படியொரு காதல்....!

சரவணன் சொல்ல நிர்மலா கைகளைத் தட்டியவள், சரிதான்... ஷேக்ஸ்பியரின் ரோமியோ ஜூலியட் நாடகம் தான் ஞாபகம் வருகிறது. அதில்தான் ரோமியோவைப் பார்த்த முதல் சந்திப்பிலே ஜூலியட் மனதை பறி கொடுப்பாள். பெரிய மன்மதக்குஞ்சாய் ரோமியோவும் பறி கொடுப்பான். இருவருக்கும் காதல் ஸ்டார்ட் ஆகிவிடும். அப்படித்தானா உங்கள் கதையும்....? இகழ்ச்சியும் கேலியுமாய் அவள் கேட்க... வெட்கப்படாமல் சிரித்த சரவணன், நீ சொல்வது சரி நிர்மலா, நான் உன்னைப் போலத்தான் ஷேக்ஸ்பியரின் நாடகத்தை நினைத்து, நாம் என்ன ரோமியோ ஜூலியட்டா கண்டதும் காதல் வர... என நினைத்துதான் யோசித்தேன். ஆனால் நிஜத்தில் உண்மையாய் கண்டதும் காதல் வந்தது. இருவருக்கும் மெய்யாய் அன்பு வந்தது.....

வரும்... வரும்.... கொள்ளிக்கட்டை தான் வரும்...

ஆத்திரத்தோடு அவன் உதடுகளுக்குள் அரிசிப் பற்களை கடித்து அரைத்ததை உணராமல் சரவணன் தொடர்ந்து கொண்டிருந்தான்.

நிர்மலா இந்தக் காதல் ஏற்பட்டதில் இன்னொரு சுவாரஸ்யமான விஷயத்தையும் கண்டு பிடித்தேன். அது....

சொல்லுங்கள்.... அப்படி நிம்மியுடன் காதல் ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்த விஷயம் என்னவோ...? மறுபடியும் துடுக்குடன் கேலி செய்தாள் அவள்.

அவன் அதை கொஞ்சமும் உணராமல் அவளை சீரியஸாகப் பார்த்தவன், நிர்மலா... நீ திருக்குறள் படித்திருக்கிறாய்தானே...? என்றான்.

ம்ம்... படித்திருக்கிறேன். ஆனால் அதல் உங்கள் காதல் நிம்மியைப் பற்றி வள்ளுவர் ஏதும் குறள் இயற்றியதாய் ஞாபகம் இல்லையே...!

அவள் வேண்டுமென்றே சீண்டலாய்ப் பேசி பழி தீர்க்க அவனோ நெற்றியைத் தேய்த்தபடி மேலும் சுவாஸ்யமானான்.

அது... சரிதான் நிர்மலா.வள்ளுவர் நிம்மதியைப் பற்றி சொல்லவில்லை. நிம்மியின் காதல் பார்வையை அவள் என்னைப் பார்த்த ஆழமான ஒருவித பார்வையை, ஒரு இரண்டு வரிகளில் என்னமாய் அழகாக சொல்லியிருக்கிறார் தெரியுமா?

நிர்மலாவினுள் பரிகாசம் கூடியது. அட.... வள்ளுவர் உங்களுக்காக அந்தக் காலத்திலேயே குறள் பாடியிருக்கிறாரா? பேஷ்.... பேஷ்... தெய்வீகக் காதல்தான் போங்கள்!

அவள் பரிகாசத்தைப் பாராட்டாய் எண்ணிக் கொண்ட



சரவணன், நிர்மலா அந்தக் குறள் வரிகளைச் சொல்கிறேன் அப்போதுதான் அப்படி நான் சொல்வது எவ்வளவு அர்த்தமான உண்மை என்பது புரியும்.... என்றபடி குறளைச் சொல்ல ஆரம்பித்தான்.

நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு

தானைக்கொண் டன்னது உடைத்து.

அதாவது நிர்மலா, தலைவர் மையல் கொண்டு பார்த்ததும், தலைவியும் காதல் கொண்டு அப்படியொரு பார்வையைத் திரும்பப் பார்க்கிறாளாம். அந்தப் பார்வை ஆயிரமாயிரம் படைகள் சேனைகளோடு வந்து தாக்குவது போல் இரக்கிறதாம். தலைவியின் அந்தப் பார்வைக்கு அப்படி ஒரு மகத்தான சக்தியாம்!

அப்படியொரு பார்வை அந்தத் தலைவி நிம்மி உங்களைப் பார்த்தாளாக்கும். நீங்களும் மன்மதக் குஞ்சாய் மயங்கி விட்டீர்களாக்கும்! நிர்மலா தாள முடியாத எரிச்சலுடன் ஏற்றி இறக்கி கிண்டலாய்ச் சொல்ல... அதற்கு தலையாட்டி நிஜமாய் ஆமோதித்தான் சரவணன்.

ஆமாம்... நிர்மலா... உண்மையில் அதுதான் நடந்தது. அந்த நிம்மிக்கு உன்னைப்போல் சற்றுப் பெரியதான விழிகள். நீ மை வைத்திருப்பது போல்தான் அவளும் கண்களில் அழகாய் மை வைத்திருப்பாள். அதுபோல்....

சரவணன் மேற்கொண்டு ஏதோ சொல்லப்போக அதற்கு மேல் நிம்மி புராணம் கேட்கப் பிடிக்காதவளாய் கைகளை உயர்த்தினாள்.

புரிகிறது... சரவணன், உங்கள் இருவருக்கும் காதல்

வந்தாயிற்று. நீங்கள் காதலித்தீர்கள். அதற்குப் பின் என்ன நடந்தது. அதைச் சொல்லுங்கள்.....

அதற்கும் பலமாய் தலையாட்டினான் சரவணன்.

சொல்கிறேன், நிம்மியும் நானும் பார்த்து சந்தித்த ஒரு வாரத்திலே காதல் வந்துவிட்டது. இரவரும் அலுவலகத்தை மறந்து பார்க், பீச், ஹோட்டல் என சுற்றினோம் என்றவன் ஏதோ ஞாபகம் வந்தவனாய், ஏன்... இந்த ரெஸ்டாரன்டிற்கு கூட இப்போது உன்னுடன் வந்தது போல் நிம்மியைக் கூட்டிக் கொண்டு எத்தனை முறை வந்திருப்பேன் தெரியுமா? எனவும் நிர்மலாவின் முகத்தில் தாங்க முடியாத எரிச்சல் பரவியது.

அருவையாய் முகத்தை வெட்டியவள், மேலே சொல்லுங்கள்.. என்றாள் பற்களைக் கடித்தபடி.

ம்ம்... அப்படியெல்லாம் வளர்ந்த எங்களது காதல் ஒருநாள் நிம்மியின் தந்தைக்கு தெரிந்து போயிற்று. விடுவாரா அவர்? எந்த தந்தையாவது தனது கோடீஸ்வர மகள் தன்னிடம் வேலை பார்ப்பவனை காதலித்தால் ஒத்துக் கொள்வாரா? அவரும் அப்படித்தான். பெரிதாய் குதித்து தாண்டவமாடி விட்டார்.

அப்படியா... அப்புறம் என்ன நடந்தது.

அப்புறம்... என்ன? நிம்மி என்னிடம் ஓடி வந்தாள். தந்தையின் பேச்சை தன்னால் மீற முடியாது என்று சொன்னாள். மேலும்....

காதலை மறந்துவிடு... என்று சொல்லியிருப்பாளே? நிர்மலா ஆர்வமாய் கேட்க பலமாய் தலையை வெட்டி மறுத்தான் சரவணன்.



அப்படி இல்லை... நிர்மலா!

பின் எப்படி?

அதற்குப் பதில் இன்னொரு அருமையான வழி சொன்னாள்...

அது.... என்ன வழியோ...?

நிர்மலாவின் கேலியை உணர்ந்து கொள்ளாமல் சீரியஸாகவே பேசினான் சரவணன்.

நிர்மலா, நிம்மியின் தந்தை எங்களது காதலை மறுப்பதற்கு முக்கிய காரணம் ஸ்டேட்டஸ் தானாம். நானும் அவர்களைப் போல் பெரும் பணக்காரனாய் கோடீஸ்வரனாய் இருந்தால் பிரச்சினை இல்லையாம் அதனால்....

உங்களையும் பணம் சம்பாதித்து கோடீஸ்வரனாக மாற சொல்லியிருப்பாளே....?

ஆமாம்... சரியாகச் சொன்னாய்! நிர்மலா, எப்படி இது உனக்குத் தெரியும்? என்றான் ஆச்சரியம் பொங்கியவனாய்.

நிர்மலா அசட்டையாய் தோள்களை குலுக்கினாள்.

ஹூஹூம்.... இது என்ன பெரிய விஷயமா? எல்லா பணக்கார வீட்டுப் பெண்களும் காதலித்துவிட்டு கடைசியில் சொல்கிற வழக்கமான டயலாக்தானே...

ஆனால் நிம்மி அப்படிப்பட்டவள் இல்லை நிர்மலா....

அப்படியா?

எனக்காக வருத்தப்பட்டாள். வேதனையோடு

கண்ணீர்விட்டாள்.,

சரவணன் சொன்னதற்கு, த்ஸோ.... த்ஸோ... என போலியாய் உச்சுக் கொட்டியவள், அந்தக் கண்ணீரை நீங்கள் துடைத்து விட்டீர்கள்தானே? என்றாள் கிண்டல் பொங்க.

அப்போதுதான் அவள் கேலியாய் தன்னை எள்ளி நகையாடுவதை முதன் முறையாய் சரவணன் உணர்ந்தான்.

நிர்மலா, நான் என் காதல் கதையை சீரியஸாக சொல்லி வருகிறேன். நீ என்னவென்றால்... பொய்க் கோபத்துடன் சரவணன் முறைக்க, அடக்க முடியாத சிரிப்புடன் நானும் சீரியஸாகத்தான் கேட்டுக் கொண்டு வருகிறேன்.... என போலியாய் பவ்யம் காட்டி மீண்டும் சிரித்தாள் நிர்மலா.

அதற்குப் பின் என்ன நடந்தது தெரியுமா?

பெரிய புதிர் போல் அவன் கேட்க, அவள் மறுபடியும் அடங்காத சிரிப்பு சிரித்தாள்.

அத்தோடு நீங்கள் நிம்மியைப் பிரிந்து விட்டீர்கள். உங்கள் காதல் செத்துவிட்டது. அப்படித்தானே?

அவள் சொன்னதற்கு வேகத்துடன் மறுப்பாய் தலையசைத்தான் சரவணன்.

பின்...... என்னவாம்? என்றாள் அவள் ஆர்வமாய்.

நான் நிம்மியை விட்டுப் பிரிந்தது உண்மைதான். ஆனால்... ஆனால்.... எங்கள் காதல் சாகவில்லை. உயிரோடுதான் இருக்கிறது....




அது வேறு...? மறுபடியும் கேலி செய்தாள்.

அவள் உணராமல் மறுபடியும் சீரியஸாகி தீர்க்கமாய் பேசினான்.

நிர்மலா, நானும் நிம்மியும் எங்களது காதல் ஜெயிக்க ஒரு ஒப்பந்தம் போட்டிருக்கிறோம். அதன்படி நான் இப்படித் தனியே நின்று, தொழிலில் சம்பாதித்து பெரும் கோடீஸ்வரனாகும்வரை அவள் நிம்மி எனக்காக காத்திருப்பாள். நானும் அவளுக்காக காத்திருப்பேன். நான் ஜெயித்து எனது கோடீஸ்வர இலக்கை அடைந்ததும் எங்கள் காதல் கை கூடி நாங்கள் திருமணம் செய்து கொள்வோம்....!

இம்முறை அவன் பேசியதைக் கேட்டு அப்படியே வாயடைத்துதான் போனாள் நிர்மலா.




அன்று இரவு முழுவதும் நிர்மலாவாய் தூங்க முடியாமற்போயிற்று. வீட்டுக்கு வந்து படுக்கையில் படுத்தவள் புரளத்தான் செய்தாள்.

என்னென்னவெல்லாம் சொல்லி விட்டான்! நிம்மியாம் காதலிக்கிறானாம்! உன்னிடம் பணமில்லை என்று உதறியவளை ச்சீ! போ என உதாசீனப்படுத்தாமல் பெரிய ரோமியோ போல் அவளை அடைய பணம் சம்பாதித்து கோடீஸ்வரனாகப் போகிறானாம்.

இந்தச் சரவணனுக்கு சூடு சொரணை என்பதெல்லாம்

கொஞ்சமும் கிடையாதுதான் போலும்.

எவ்வளவு கேவலமாய் அலட்சியத்துடன் இவனை தூக்கி யெறிந்திருக்கிறாள். அவளைப் போலய் வெட்கமில்லாமைல் காதலி என்று இன்னும் சொல்லிக் கொண்டிருக்கிறானே.... இவனை என்னதான் செய்வது?

சிந்தித்தவள் அதற்கு மேல் கொதிப்பு அடங்காதவளாய் எழுந்தே உட்கார்ந்து விட்டாள். இதில் திடீரென அவன் நிறுவனத்திற்குப் பெயராய் நிம்மி கன்ஸல்டன்ஸி என பெயரை முன்மொழிந்தது ஞாபகத்திற்கு வர அவள் கொதிப்பு அதிகமாகியது.

என்ன தைரியமிருந்தால்.... காதலியின் பெயரைக் கொண்டு- நம் நிறுவனத்திற்கு வைப்பான்? என அரிசிப் பற்கள் கடிபட.... ஆத்திரமாய் நினைத்தவள் அப்படியே சிந்தித்தபடி ரொம்ப நேரம் உட்கார்ந்திருந்தாள்.

கடைசியில், நாளை எல்லாவற்றையும் சரவணனிடம் கேட்டு அவனை உண்டு இல்லை என பண்ணி விடுவது... என்ற மன நிலையிலேயே படுத்தவள், அப்படியே தூங்கியும் போனாள்.

மறுநாள்.. விடிந்ததும் குளித்து முடித்து தயாராகிக் கொண்டிருந்தவளை அழைத்துச் செல்ல சரவணனே விட்டிற்கு வந்து விட்டான்.

அதிசயமாய் பார்த்தவளின் புதிரை அவனே நீக்கவும் செய்தான்.

என்ன நிர்மலா... மறந்து விட்டாயா? இன்று மலர் சோப்



மார்க்கெட்டிங் செய்வது சம்பந்தமாய் சில விபரங்களை நாம் சேகரிக்க வேண்டுமே... என்று ஞாபகப்படுத்த நிர்மலா பலமாய் தலையாட்டினாள்.

ஆமாம்... ஆமாம்... ஞாபகமிருக்கிறது....

ம்ம்.... அப்படியானால் கிளம்பு சீக்கிரம்... என விழிகள் பளபளக்க பேசியவனை ஆர்வமாய்ப் பார்த்தாள் நிர்மலா அவனது தொழில் உற்சாகம் அவளை மகிழ்ச்சியாக்கி, அவளுக்கும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியது.

ஐந்தே நிமிடத்தில் ஒப்பனையை முடித்துவிட்டு கிளிப்பச்சை வண்ண சேலையில் அவள் வெளிவந்தபோது தனது கண்களை அகல விரித்து அதிசயிக்கத்தான் செய்தான் சரவணன்.

அவள் தனது சேலையையும், உடல் நளினத்தையும் ஆசையாயப் பார்த்து அப்படி பார்வையால் பருகுவதை உணர்ந்தவள், வேண்டுமென்றே அவன் முன் நிதானமாய் நின்று ஒவ்வொன்றாய் செய்ய ஆரம்பித்தாள்.

சரியாய் இருக்கும் ஹேண்ட் பேக்கை சரிபார்ப்பது போல் கடிகாரத்தை ஒழுங்குப்படுத:துவது போல் எல்லாம் வேண்டுமென்றே அவன் முன்னின்று போஸ் கொடுத்தாள்.

ஒருகணம் ஏன் இப்படியெல்லாம் செய்கிறோம்... எதற்காக இந்த வினோத ஆசை என்றெல்லாம் கேள்விகள் குமிழியாய் எழுந்து அவளைத் துளைக்க அந்தக் கேள்விக் குமிழிகளையெல்லாம் பதில் சொல்லாமல் உடைத்தாள்.

அவன் பைக்கை ஸ்டார்ட் செய்தபோது வேகமாய் பில்லியனில் ஏறி உட்கார்ந்து மலர்க்கரங்களால் அவனது

தோள்களை அழுந்தப் பற்றினாள். அன்று முழுவதும் அலைந்து மலர் சோப் கம்பெனிக்கு திட்ட அறிக்கை தயாரித்துக் கொடுத்தார்கள்.

அதென்ன... கூத்து? விட்டால் இவனது ஆசையில் தலையை விரித்து போட்டுக் கொண்டுடு ஆட ஆரம்பித்து விடுவோமா? என்ற பயத்தோடு எண்ணங்களை கட்டுப் படுத்தினாள்.

இருவரும் எதிர்பார்த்தபடியே மலர் சோப் கம்பெனி உரிமையாளர்களுக்கு அவர்கள் தயாரித்துக் கொடுத்த திட்ட அறிக்கை ரிப்போர்ட் ரொம்பவும் பிடித்துப் போயிற்று-அதனால் மகிழ்ந்து அவர்கள் பதிலுக்கு கூடுதலான சர்வீஸ் சார்ஜாக பத்தாயிர ரூபாயை வழங்கினர்.

முதன் முதலாய் கன்ஸல்டன்ஸி தொழிலில் சம்பாதித்த அந்த நூறு ரூபாய் கட்டை நிர்மலாவும் சரவணனும் தலையில் வைத்துக் கூத்தாடாத குறையாய் பார்த்தனர்.

தொடர்ந்து பல நிறுவனங்கள் தங்களுக்கு கன்ஸல்டண்டட்டாக பணியாற்றி திட்ட அறிக்கை தயாரித்துக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ள ஆரம்பித்தன. நிம்மி கன்ஸல்டன்ஸிக்கு மெல்ல ஆர்டர்களும் வாடிக்கையாளர்களும் குவிய ஆரம்பித்தனர்.

சரியாக ஆரம்பித்த மூன்று மாதங்களில் பெரும் வளர்ச்சியை கண்டு விட்டது நிம்மி கன்ஸல்டன்ஸி. நிர்மலா தங்களது முதல் முயற்சியே இப்படி பெரும் வெற்றியைத் தந்திருப்பதை எண்ணி சந்தோஷப்பட அவளை மேலும் சந்தோஷக் கடலில் திக்குமுக்காடும்படி அன்று அலுவலகம்



வந்த சரவணன் அந்த கேள்வியைக் கேட்டான்.




நிர்மலாவால் ஒரு கணம் நம்பமுடியவில்லை

என்ன சொன்னீர்கள் என்றாள் பயங்கர ஆச்சரியம் கொண்டவளாய்.

சரவணன் நேருக்கு நேர் முகத்தைப் பார்த்து அவள் மைவிழிகளை சந்தித்தான்.

உன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன். உனக்கச் சம்மதமா நிர்மலா?

திரும்பவும் அழுத்தந்திருத்தமான குரலில் அவன் சொன்னதும் தான் அவன் சொல்வது உண்மை நிஜமாகத் தான் கேட்கிறான் என்பது உரைத்தது.

இப்படி ஒரு வார்த்தைகளை அவன் விரும்பியதுதான் சொல்லப் போனால் நிம்மி மயக்கத்தில் இருந்து மீண்டு தன்னைப் பார்த்து அவன் கேட்க மாட்டானா என அவள் ஏங்கியதும் இதைத்தான்.

ஆனால்... இப்படிட திடுதிப்பென்று கேட்கிறானே... என்ன காரணமாய் இருக்கும்?

அவள் யோசனையைப் புரிந்து கொண்டவளாய் அவன்

பேசினான்.

நிர்மலா, நான் இப்படித் திடீரென உன்னிடம் கேட்பது உனக்கு ஆச்சரியமாக இருக்கும். ஆனால்... இப்போது எனக்கிருக்கும் சூழ்நிலையில் நான் உடனடியாக கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். என்னை ஏமாற்றிய அந்த நிம்பி முகத்தில் கரியைப் பூச வேண்டும்.

அவன் படபடப்புடன் ஆத்திரமாகச் சொல்ல அப்போதுதான் அவளுக்கு விஷயம் புரிந்தது.

என்ன... நிம்பி உங்களை ஏமாற்றிவிட்டாளா? என்றாள் வியப்பு விலகாமல்.

சரவணன் முகம் மாறி சோகமாய் தலையசைத்தவன் ஓரிரு நிமிடங்கள் பேசாமல் உதடுகளை இறுக்கியபடி இருந்தவன் மெல்ல ஆரம்பித்தான்.

நிர்மலா, நான் முன்பே சொல்லியிருக்கிறேன். உன்னிடம் நிம்பியின் காதலைப் பற்றி எங்கள் இருவருக்கும் உள்ள காதல் ஒப்பந்தம் பற்றி....

ஆமாம்... சொன்னீர்கள். நீங்கள் பணம் சம்பாதித்து கோடீஸ்வராகும்வரை பணக்கார நிம்பி காத்திருப்பாள் என்று... அப்படித்தானே....

அமாம்.... நிர்மலா... அதுதான் எங்களது ஒப்பந்தம் ஆனால்... ஆனால்... நிம்பி இப்போது அந்த ஒப்பந்தத்தை மீறி விட்டாள். என்னை உதறித் தள்ளிவிட்டு, வேறொருத்து கோடீஸ்வர மாப்பிள்ளையைத் தேடிக் கொண்டாள். வருகிற பன்னிரெண்டாம் தேதி அவளுக்கு கல்யாணமாம்.

அவன் சொல்லச் சொல்ல அவளுக்கு தொபுக்கென விழுந்தது போலத்தான் ஒருகணம்



மகிழ்ச்சியில் தலை கிறுகிறுத்தது.

ஆனாலும் சரவணனின் சோகமயமான சூழ்நிலையைக் கண்டவள் எதையும் வெளிக்காட்டாது அவனைப் பார்த்தாள்.

என்ன சொல்கிறீர்கள் சரவணன்... நிம்பி உங்களை உதறித் தள்ளிவிட்டாளா? நீங்கள் இருவரும் உயிருக்குயிராய் காதலித்தீர்களே...? என்றாள் குரலில் மேலும் வியப்பு காட்டி.

சரவணன் அதற்கு வேகமாய் தலையசைத்தவன், எல்லாம் சரியாகத்தான் நடந்து கொண்டிருந்தது. ஆனால் இப்படி எங்கள் காதல் முறிந்ததற்கு நிம்பியின் தந்தைதான் காரணம்... என்றான்.

நிம்பியின் தந்தையா?

ஆமாம்.... அவர் பெயர் குணசேகர். பரம்பரை பணக்காரராய் வந்தவர். அவருக்கு என்னை, நிம்பியை நான் காதலிப்பது எல்லாம் சுத்தமாய் பிடிக்காத விஷயம். நிம்பிக்காக எங்கள் காதலை ஏற்றுக் கொள்வதுபோல் இவ்வளவு நாள் நடித்திருந்தவர் சரியான சந்தர்ப்பம் வந்தபோது தன் வேலையைக் காட்டி நிம்பி மனதை மாற்றி விட்டார். பண ஆசையைக் காட்டி பெரும் கோடீஸ்வரர் ஒருவரை நிம்பிக்கு மாப்பிள்ளையாக்கி விட்டார்....

அதற்கு நிம்பி சம்மதித்து விட்டாளா?

நிம்பி முதலில் சம்மதிக்கவில்லை ஆனால், கல்லும் கரையும் என்பது போல் தொடர்ந்து நிம்பியிடம் பணம் பற்றி கோடி கோடியாய் பணத்தில் புரள்வது பற்றி பேசியே.... அவளது மனத்தை மாற்றியிருக்கிறார். தற்போது பிசினஸில்

தோல்வி ஏற்பட்டதால் வேறு நிம்மியின் தந்தைக்கு நிறைய நஷ்டம். பல இடங்களல் கடன் வாங்கி கடனில் தத்தளிக்கிறார். அதனால் வேற வழியில்லாமல் நிம்மியும் மனம் மாறி விட்டாள். என்னிடம் நேருக்கு நேர் இதையெல்லாம் விடுங்கள். என்னை மறந்து விடுங்கள்... என முகத்திலடித்தாற்போல் டயலாக் வேறு பேசுகிறாள்....

அப்படியா....? என நிர்மலா வியக்க, சரவணன் கோபமும் ஆத்திரமுமாய் தனது பற்களைக் கடித்தான்.


என்னையும் எனது காதலையும் இப்படி துச்சமாய் தூக்கியெறிந்து என்னை அவமானப்படுத்திய அந்த நிம்மியை சும்மா விடக்கூடாது. அவளைப் பழி வாங்க வேண்டும். அவள் கல்யாணம் செய்யும் அதே நாளில் நானும் கல்யாணம் செய்து அவளது மூக்கை உடைக்க வேண்டும். அதற்கு.... அதற்குத்தான்.... என்ற சரவணன் சட்டென குரலில் கடுமையைக் குறைத்து அவளைப் பார்த்தான்.

அதனால்தான்... நிர்மலா உன்னிடம் கேட்கிறேன். உன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன். உனக்கு சம்மதமா என்று....

சரவணன் பேச்சு முடித்துவிட்டு ஆவலாய் அவள் முகத்தைப் பார்த்தான்.

நிர்மலா ஓரிரு நிமிடம் பற்களால் உதடுகளை அழுந்தக் கடித்து யோசித்தவள், ஒருநாள் எனக்கு அவகாசம் கொடுங்கள் என்றாள்






நிர்மலா சரவணன் கேட்டதும் உடனே சம்மதம் என்று சொல்லிவிடத்தான் துடித்திருந்தாள்.

ஆனால் சரவணன் கேட்ட விதம், அந்தத் தொனி நிம்மியை பழிவாங்குவதற்காகவே அப்படியொரு முடிவை அவன் எடுத்திருப்பதாக உணர்த்தியது.

அப்படியானால் அவனுக்கு நிஜமாக நிர்மலாவை மணமுடிக்க ஆசை இல்லையா?

எந்த வேலையும் ஓடாமல் இரண்டு மூன்று மணி நேரம் அதுபற்றியே யோசித்தவள் அடங்க மாட்டாதவளாய் மாலையில் அவனிடமே கேட்டு விட்டாள்.

அவள் அப்படிக் கேட்டதும், என்ன அப்படிக் கேட்டு விட்டாய் நிர்மலா? என பதற்றத்துடன் பார்த்த சரவணன், நிர்மலா முதலில் ஒரு விஷயம் உனக்கு விரிவாய் தெளிவுப் படுத்திவிடகிறேன். நிம்மி என்னை ஏமாற்றிவிட்டதால் நிம்மியை வழி வாங்கும் ஒரே காரணத்திற்காக மட்டும் உன்னிடம் கேட்கவில்லை நிர்மலா. நிஜமாகவே எனக்கு என்னைப் பிடித்திருக்கிறது. அப்படி ஒரு மணமுடிக்கும் எண்ணமும் உன்னை முதன் முதலாய் பார்த்த கணத்தில், லேசாய் என் மனதில் உண்மையாகவே துளிர்த்தது. இப்போது அதற்கான சரியான சந்தர்ப்பம் தானாக வருகிறபோது

முழுவதுமாக என் மனம் உன்னை நாட ஆரம்பித்து விட்டது. மற்றபடி இந்த விஷயத்தில் நீ என்ன முடிவெடுத்தாலும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன்....

அவன் விளக்கமாக சொல்லி முடித்துவிட்டு கண்கள் விரிய ஏங்கிப் பார்த்தபோது அதற்கு மேலும் தாங்க மாட்டாதவளாய் தன் பதிலை முகம் மலரச் சொன்னாள்.

சரவணன் இன்பமாய் அதிர்ந்தான்.

என்ன... சம்மதம்மா? என்றபடி நம்ப முடியாமல் அவள் கைகளைப் பிடித்து சந்தோஷமாய் குலுக்கினான்.

நிர்மலாவுக்கும் ஒரே மகிழ்ச்சிதான். நிம்மி மேல் வைத்த காதலை சரவணன் இவ்வளவு சீக்கிரத்தில் உடைத்து, தன்னை நாடுவான் என அவள் கனவிலும் எதிர்பார்க்க வில்லையே....

அதை மகிழ்ச்சிக் கடலில், அன்று முழுவதும் சந்தோஷமும் பூரிப்புமாய் திக்குமுக்காடினாள். இருவர் வீட்டிலும் இந்த விஷயத்தை சொன்னபோது, அவர்கள் இதை ஏற்கனவே எதிர்பார்த்திருந்ததால் உடனே பச்சைக் கொடி காட்ட அவள் சந்தோஷம் அதிகரித்தது.

கல்யாண பத்திரிகை அடிப்பதிலிருந்து மற்ற வேலைகள் எல்லாம் வெகு விரைவாய் மளமளவென்றுதான் நடந்தன.

அழைப்பிதழ்கள் வந்ததும் முதல் பத்திரிகையை தூக்கிக் கொண்டு போய் நிம்மியிடம் வீசிவிட்டு வந்தான் சரவணன் அதற்குப் பின் தான் அவனுடைய வேகமும், ஆவேசமும் தணிந்து நிதானத்திற்கு வந்தான் என்று சொல்ல வேண்டும்.



கூடவே நிம்மியிடம் அவன் அழைப்பிதழைக் கொடுக்க சென்ற செய்கை நிர்மலாவை சிறிது கலவரப்படுத்த அவள் கைகளைப் பிடித்து சத்தியம் செய்யாத குறையாய் பேசினான்.

நீ எதற்கும் பயப்பட வேண்டாம் நிர்மலா. அந்த நிம்மி அத்தியாயம் இத்தோடு முடிந்துவிட்டது. அவளை முழுவதும் தலை முழுகிவிட்டேன். இனி ஒருபோதும் அவளை சந்திக்க மாட்டேன் என ஆறுதலைக்கவும் செய்தான்.

ஆயிற்று, ஒரு வழியாய் பத்து பன்னிரெண்டு நாட்கள் மின்னல் வேகத்தில் ஓடி முகூர்த்த நாளும் வந்தது.

உறவினர்கள், நண்பர்கள் புடைசூழ, அலங்கரிக்கப்பட்ட மணவறையில் சிவந்த முகமாய் வெட்கத்தில் குனிந்திருந்த நிர்மலாவுக்கு தாலி கட்டினான் சரவணன்.

இனிதே திருமணம் முடிந்து, சுப நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றாய் அரங்கேறிக் கொண்டிருந்தது.

மாலை அலுவலக நண்பர்களுக்காக வரவேற்பு ஏற்பாடு செய்யப்பட்டு, இன்னிசை முழங்க அதுவும் ஆரம்பமானது.

அப்போதுதான் நண்பன் மூலமாய் அந்தச் செய்து சரவணனின் காதுகளுக்கு வந்தது.

அதே தேதியில் அன்று நடக்கவிருந்த நிம்மியின் திருமணம் நடக்கவில்லையாம். முகூர்த்த நேரத்தில் நிம்மி எழுந்து வந்து கல்யாணத்தை நிறுத்தி விட்டாளாம். காரணம் காதலனான சரவணனை மறக்க முடியாததுதானாம்.

செய்தியைக் கேட்டு, அப்படியே இடிந்து போனான் சரவணன்.




திருமணம், முதலிரவு எல்லாம் ஒரு பெண்ணுக்கு வாழ்க்கையில் எவ்வளவு முக்கிய விஷயங்களாய் மறக்க முடியாதபடி ஆகிவிடும் என்பதையெல்லாம் நிர்மலா உணர்ந்திருந்தவள்தான்.

ஆனால் மாலை வரவேற்பின்போது நிம்மி பற்றிய அந்தச் செய்தியைக் கேட்டபின் சரவணனின் நிலை அடியோடு மாறிவிட்டதே!

ஆத்திரமும் ஆவேசமுமாய் நிம்மியைப் பழிவாங்க அவளை கல்யாணம் செய்து கொண்டவன் இப்போது அவசரப்பட்டு விட்டோமா.... என நினைக்க ஆரம்பித்து விட்டான்.

அன்றை முதலிரவு சடங்குக்கு பெண்கள் அழகு ஒப்பனை செய்தபோது மனமே இல்லாமல் சிலை போல்தான் உட்கார்ந்திருந்தாள் நிர்மலா.

என்ன நிர்மலா அதற்குள் கனவில் சஞ்சரிக்க ஆரம்பித்து விட்டாயா? இன்று இரவு நீ தூங்கவே முடியாது.

கிண்டல்கள் கேலிப் பேச்சுக்கள் எல்லாம் அவள் காதலி கொஞ்சமும் உரைக்கவே இல்லை.

எந்தவித சலனமுமில்லாமல்தான் பால் தம்ளருடன் அந்த



அறைக்குள் நுழைந்தாள்.

மலர்கள் அலங்கரிக்கப்பட்ட அறை, பட்டு மெத்தை, கட்டில், நறுமண திரவியங்கள், இனிப்புப் பதார்த்தங்கள்.

அவள் எல்லாவற்றையும் பார்த்தபடி சரவணனைத் தேடினாள்.

அறையின் ஓரமான நாற்காலி ஒன்றில் எந்தவித சுவாரஸ்யமும் இல்லாமல் கண்களை மூடியபடி தலையைக் கவிழ்ந்திருந்தான் சரவணன்.

அவள் நினைத்து எதிர்பார்த்த காட்சிதான்.

இருந்தாலும் மனதோரத்தில் புதுப்பெண்ணாய் உள்ளே நுழையும் தன்னை முகம் மலர கொஞ்சமாவது நிமிர்ந்து வரவேற்பான் என்று நினைத்திருந்தாள். அதிலும் ஏமாற்றமே மிஞ்சியது.

மெல்ல பால் தம்ளரை பக்கத்தில் இருந்த ஸ்டூல் ஒன்றில் வைத்தவளின் பார்வை எதிரே இருந்த நிலைக்கண்ணாடியில் சென்றது.

நன்கு அலங்கரித்து, அழகுக்கு அழகு சேர்க்கும் மணப்பெண்ணாய் அவள்.

இந்தக் கோலத்தைப் பார்த்தால் சரவணன் என்ன நினைப்பான்

உன் மனநிலை எப்படி இருந்தாலும் என்ன நடந்தாலும் சரி எனக்கு அது தேவை என முதலிரவிற்காக அவள் ஏங்குவதாய் அல்லவா நினைத்து விடுவான்.

நினைப்பு ஓட.... கொஞ்சமும் ஓசை வராமல் தன் மேலிருந்து செயற்கை ஒப்பனைகளை அவசரமாய் கழற்றினாள். குலுங்கிய கை வளையல்களைக்கூட எடுத்து விட்டாள்.

அவள் வந்த அரவம், ஏற்பட்ட சிறுசிறு ஓசைகள் எல்லாம் அவன் காதில் விழாமலா இருந்திருக்கும்?

கண்டிப்பாகக் கேட்டிருக்கும் அறையினுள் தான் வந்ததை நிச்சயம் உணர்ந்திருப்பான்.

இருந்தும் நிம்மியை நினைத்து கல்லுளிமங்கனாய் மருகிக் கொண்டிருக்கிறானே....

கொஞ்சம் எரிச்சலாகவே நினைத்தவள் மறுகணமே அதை உதறிவிட்டு புன்னகை முகமாகவே அவன் பக்கம் போனாள்.

மெல்ல அவன் தோள்களில் கை வைத்தபோது திடுமென நிமிர்ந்தான் அவன்.

கண்கள் சிவக்க களைத்திருந்த அவனது முகம் அவனது தீவிரமான சிந்திப்பை உணர்த்தியது.

நிம்மியை நினைத்து இவ்வளவு உருக்கமோ...

அவன் எதுவும் பேசிவிடும் முன் தான் சொல்லிவிட வேண்டும் என அவசரம் காட்டியவள் அதே புன்னகை முகத்துடன், உங்களது சூழ்நிலை எனக்குப் புரிகிறது சரவணன். எது பற்றியும் கவலை கொள்ளாமல் இன்றிரவு நிம்மதியாய் தூங்குங்கள் எல்லாம் சரியாகிவிடும் என்றாள்.

அவள் வேண்டுமென்றே இன்றிரவு என வார்த்தைகளில் அழுத்தம் கொடுத்தது அவனுக்கு நன்கு உரைத்திருக்க



வேண்டும். மனதில் நிம்மியை நினைத்துக் கொண்டு அவளுடன் என்ன பேச... என்றுதானே அவனது கவலை? அதற்குத்தானே தலைகவிழ்ந்த இந்த உசத்த சிந்தனை?

இந்த நல்ல வார்த்தைகளை அவனே அவன் வாயால் சொல்லி அவன் தலையில் சம்மட்டியால் அடிப்பதைவிட தானே தன் தலையில் குட்டிக் கொள்ளலாமே!

அவள் நினைத்தபடியே அவள் அப்படிச் சொன்னதும் சரவணன் முகத்தில் ஒருவித பயம் நீங்கி நிம்மதியான பெருமூச்சு வெளிப்படுவதை கவனித்தாள்.

ஆக.... அவள் சந்தேகம், நினைப்பு சரிதான். அந்த நிம்மிக்காகத்தான் இந்த கவலை. இப்படி தீவிர சிந்தனை, அந்த நிம்மி நினைப்பில் அவள் உலகத்தில் தான் நுழைந்து விடக்கூடாது என்றுதானே பயப்பட்டிருக்கிறான்?

அந்த நிம்மி என்ன அவள் படத்தை இவன் மனதில் ஆணி அடித்து வைத்தா மாட்டியிருக்கிறாள். அவளை நினைத்து இந்த உருகு உருகுகிறானே....

அவள் மேற்கொண்டு எதுவும் பேசாது உதடு கடித்து நிற்பதைப் பார்த்த சரவணன் மெல்ல நிமிர்ந்தான்.

நிர்மலா... என்று அவன் விளித்தபோது நிமிர்ந்தவள் ஆவலாகவே அவனைப் பார்த்தாள்.

அவனோ முகத்தை வேறு பக்கம் வைத்தவாறே பேசினான். நிர்மலா, இந்தத் திருமணம் உண்மையானது தான் நிலையானதுதான். அதனால் நீ எது பற்றியும் பயம் கொள்ளத் தேவையில்லை. ஆனால்....

அப்படியே நிறுத்திவிட்டு அவள் பக்கம் திரும்பினான். நேருக்கு நேர் அவள் கண்களைச் சந்தித்தான்.

நிம்மியின் நினைப்பு என்னை வாட்டுகிறது. என் மனத்தை ஒன்றுபடுத்த எனக்கு அவகாசம் தேவை புரிந்து கொள் என்றான் சலனமற்ற குரலில்.

எனக்குப் புரிகிறது.... என்றாள் அவளும் குரலில் எந்த உணர்ச்சியுமில்லாமல்.

நிமிர்ந்து அவனையே பார்த்தபோது அவன் ஏதோ அவளைப் பார்க்கவே கூடாதது போல் சட்டென முகத்தைத் திருப்பிக் கொள்ள அவளுக்கு எரிச்சலாய் வந்தது.

முகத்தை திருப்பும் அளவுக்கு அவள் வேண்டாதவளாகி விட்டாளா?

அடக்க முடியாமல் கேட்டே விட்டாள் அவள்.

இப்போது உங்களுக்கு என்னை பிடிக்கவில்லையா சரவணன்? என்னைப் பார்த்தாலே வெறுப்பாய்... அருவெறுப்பாய் எதும் உங்களுக்குத்தோன்றுகிறதா? என அவள் நேருக்கு நேர் கேட்கவும் அவன் திகைத்துப் போனான்.

அதெல்லாம் ஒன்றுமில்லை... என்றான் அவன் அவசரமாக அவள் கண்களை நோக்கியபடி....

அவன் ஒருவித பதற்றத்துடன்... சொல்லிய விதம் அவளை சற்றே ஆறுதல்படுத்தி ஆசுவாசம் கொள்ள வைத்தது.

ஆக.... ஒரேயடியாய் அல்ல, தற்சமயம் நிம்மியினால் ஏற்பட்ட பாதிப்பினால்தான்.




அதற்குப்பின் ஒன்றும் பேசாமல் இருந்த பெரிய படுக்கை மெத்தையில் ஆளுக்கொரு புறமாய் படுத்துக் கொண்டனர்.

நிர்மலா விழிகளை விரிய வைத்து ரொம்ப நேரம் தூங்காமல் இருந்தவள், கடைசியில் அயர்ச்சியுடன் தூங்கியும் போனாள்.

மறுநாள் காலை கண் விழித்தபோது, அவளுக்கு முன்பே எழுந்து வெளியே சென்றிருந்தான் சரவணன்.

அவன் அப்படி அவசரமாய் எழுந்து சென்றது நிம்மியைப் பார்க்கத்தான் என்பது பின்னால் தெரிந்தபோது அவள் கோபம் பன்மடங்காகியது.




மறுநாள் விழித்தவளுக்கு சரவணன் அருகில் இல்லாதது எரிச்சலாக இருந்தாலும் தங்கை நித்திலா தானாக முன்வந்து பேச்சுக் கொடுத்து அவளையே சுற்றி வந்தது ஆறுதலாய் இருந்தது.

நித்திலா ளசளவென பேச்சுக்காரி. விடாது எதாவது அவளிடம் பேசிக்கொண்டிருந்தாள். வீட்டின் பழைய போட்டோ ஆல்பங்களை எல்லாம் எடுத்து ஒவ்வொன்றாய் காட்டிக் கொண்டிருந்தாள்.

நிர்மலாவுக்கு அது ஆவலாய்த்தான் இருந்தது. சரவணனின் சிறு வயது புகைப்படம், ஸ்கூல் நீளிபார்மல் சாரணர் இயக்கத்தில் கோடை சுற்றுலாவில் நண்பர்களுடன் என

விதவிதமான பருவங்களில் தெரிந்த சரவணனின் அழகை ரஸித்தாள்.

பிற்பகல் நேரத்தில் அப்பாவும் அம்மாவும் வந்துவிட்டுப் போனார்கள். அவர்கள் முன் எதையும் வெளிப்படுத்தாது மகிழ்ச்சியுடன் இருப்பதுபோல் நடமாடினாள்.

மாலை நித்திலா தோட்டத்துப் பக்கம் கூட்டிப்போய் மா, பலா, நெல்லி என வரிசையாய் அமைந்திருந்த மரங்களைக் காட்டினாள். நிர்மலா மறுத்தும் பிடிவாதமாய் கொடுக்காப் புளி மரத்தில் லேசாக ஏறி கிளைகளைப் பிடித்து உலுக்கினாள் நித்திலா.

பொலபொலவென உதிர்ந்த காய்களையும், பழங்களையும் ஆவலாய் இருவரும் பொறுக்கித் தின்றனர்.

நேரம் போவதே தெரியாமல் இருவரும் பேசிக்கொண்டிருந்தபோதுதான் நித்திலா அந்த விஷயத்தைச் சொன்னாள்.

அண்ணி அண்ணனைப் பற்றி ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வேண்டும்... என இழுக்க... அவளைப் புதிராய் பார்த்தாள் நிர்மலா.

என்ன விஷயம் நித்திலா?

நிம்மி... நிம்மி... விஷயம்.....

நிம்மி என்ற வார்த்தைகளை கேட்டதுமே நிர்மலாவின் முகம் அப்படியே வாடியது.

அதைப் புரியாமல் நித்திலா தொடர்ந்து



கொண்டிருந்தாள்.

அண்ணி.இ... அந்த நிம்மி.... பெரிய பணக்காரி. அண்ணனை அப்படியே சொக்குப்பொடி போட்டாற்போல் பேச்சில் மயக்கிவிடுவாள். அவளை அண்ணன் சந்திக்கவே கூடாது. ஆனால் இன்று....

மறுபடியும் நித்திலா நிறுத்த... துடிப்பாய் நிமிர்ந்தாள் நிர்மலா.

இன்று என்னாயிற்று நித்திலா? என்றாள் ஆவலாய்.

இன்று காலை போன் அடித்து ஏதோ புலம்பியபடி அண்ணனை அழைத்துவிட்டாள். அண்ணனும் அதனால்தான் காலை அவசரமாய் நிம்மியைப் பார்க்க சென்றுவிட்டார் என்று நித்திலா அமைதியாய்ச் சொல்ல நிர்மலா திடுக்கிட்டாள்.

என்ன நிம்மியைப் பார்க்கச் சென்றாரா?

நித்திலா பலமாய் தலையசைக்க... அதற்குமேல் நிர்மலாவால் எதையும் சிந்திக்க முடியவில்லை. நித்திலா சொன்ன மற்ற எதுவும் அவள் காதில் விழவில்லை. அப்படியே சிலை போல் தான் கல்லாய் நின்று கொண்டிருந்தாள்.

அன்று இரவு சரவணன் வரும்போது சரவணனிடம் கேட்க வேண்டும். நிம்மியை ஏன் போய் சந்தித்தீர்கள்? என கேள்விகளால் வாங்கு வாங்கென்று வாங்க வேண்டும் என்றெல்லாம் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தாள்.

ஆனால்... அதற்கெல்லாம் அவசியமில்லாமல் இரவு அவள் பக்கத்தில் வந்து அமர்ந்தவன் அவனாகவே நிம்மி பற்றி பேச்சை ஆரம்பித்துவிட்டான்.

நிர்மலா... இந்தச் சூழ்நிலையில் நான் இப்படிச் சொல்வது உனக்குப் பிடிக்காததுதான். ஆனால் நிம்மி பற்றி சில விஷயங்களை நான் தெளிவுப்படுத்த வேண்டியிருக்கிறது என்ற பீடிகையோடு ஆரம்பித்து விட்டான்.

நிர்மலா ஒன்றும் பேசாமல் பற்களால் உதடுகளை அழுந்தக் கடித்துக் கொண்டு அவனையே பார்த்தாள்.

நிர்மலா, இன்று காலையில் என்னை வரச் சொல்லி நிம்மி ஃபோனில் அழைத்தாள். நான் நேரில் சென்றதும் நடந்த அவ்வளவு விஷயத்தையும் கொட்டி விட்டாள்....

ம்.... என்றாள் நிர்மலா.

நிர்மலா... நிம்மி அப்படி அவளது கல்யாணத்தை கடைசி நிமிடத்தில் நிறுத்தியதற்கு காரணம் என்ன தெரியுமா?

சரவணன் நிறுத்த மறுபடியும் ஒரு அழுத்தமான ம் கொடுத்தவாறு சலனமில்லாமல் நிர்மலா பார்த்தாள்.

நிர்மலா, அவளுக்கு அந்த கடைசி நேரத்தில், கடைசி நொடியில் கொண்டிருந்த விறாப்பு எல்லாம் போய் நான் இல்லாத ஒரு வாழ்க்கையை அவளால் நினைத்துப் பார்க்க முடியவில்லையாம் அதனால்தான் நான் கணவனாய் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, இன்னொருவரை நிச்சயமாய் கணவனாய் ஏற்றுக்கொள்ள முடியாது என்ற திடமான எண்ணத்தில் கல்யாணத்தையும் நிறுத்தி விட்டாளாம்.....

அப்படியா? என்று அவள் வியப்பாய் கேட்பதற்குள், அவளுக்கு ரொம்ப நல்ல மனசு நிர்மலா... என சரவணன்



வியந்தவன். இல்லையென்றால் என் மீது அவ்வளவு காதல் இருந்தும் எல்லாவற்றையும் தன்னுள் புதைத்துக் கொண்டு... நீங்களாவது சந்தோஷமாய் இருங்கள் சரவணன்.... என்று சொல்வாளா? என அவன் பெரிய ஆச்சரியத்துடன் சிலாகிக்க அட... அற்பப் பதரே..... அவள் இப்படியெல்லாம் பேசி உனக்கு வலை விரிக்கிறாள் என்பது கூடவா உனக்குப் புரியவில்லை என தனக்குள் மாய்ந்து கொண்டு அவனையே விசித்திரமாய் பார்த்தாள் நிர்மலா.

ஆனால் சரவணனோ விடாது நிம்மி புராணம் பாடினான்.

நிர்மலா அவனையே உறுத்துப் பார்த்தவாறு யோசித்தாள்.

கல்லூரித் தோழி ஒருவள் முன்பு சொன்னது அவள் ஞாபகத்தில் ஓடியது.

இல்வாழ்க்கை என்று வந்து விட்டால் அதில் வள்ளுவர் பாலிசியை ஃபாலோ பண்ணனும் நிர்மலா என்பாள்.

வள்ளுவர் பாலிசியா..... அது என்ன?

வேறென்ன அன்பும் அரவணைப்பும்தான். வரப்போகிற கணவன் எப்படிப்பட்ட குரங்கனாய் இருந்தால்கூட அவனிடம் அன்பு காட்டி, அரவணைத்து நம் வசப்படுத்தி விட வேண்டும்.

தோழி சொன்னது ஞாபகத்திற்கு வர நிர்மலா ஒன்று செய்தாள்.

தன் பக்கத்தில் நிம்மி, புராணம் பாடிக் கொண்டிருந்த சரவணனை அப்படியே அரவணைத்து அவனது தலையைத் தன் நெஞ்சில் சாய்த்துக் கொண்டாள்.

அகிலா கோவிந்த்

திடுக்கிட்டுப் பார்த்த சரவணனிடம், நீங்கள் பாட்டுக்கு சொல்லுங்கள் சரவணன் இப்படி இருந்தால்தான் நம் இருவருக்கும் ஒருவித நிம்மதி ஏற்படும் என்றாள் அவனை அணைத்த பிடியை விலக்காமல்




நிர்மலாவுக்கு அப்படிச் செய்ய கூச்சமாய்த்தான் இருந்தது. ஆனால் அதே கல்லூரித் தோழி வசந்தியை அவள் கல்யாணத்திற்குப் பின் பார்த்தபோது அதே அரவணைப்பு விஷயத்தைத்தான் அவள் மறுபடியும் ஞாபகப்படுத்தினாள்.

நிர்மலா நான் சொன்ன அரவணைப்பு டெக்னிக்கை விட்டு விடாதே. மாப்பிள்ளையாய் வரும் எந்த குரங்குப் பயலையும் இந்த நெஞ்சார்ந்த அணைப்பு அஸ்திரத்தால் நாம் சரி பண்ணிவிடலாம். இது என் சொந்த அனுபவம் என்று வசந்தி சொன்னபோது விழுந்து விழுந்து சிரிக்கத்தான் செய்தாள் நிர்மலா.

ஆனால் இப்போது அவள் சொன்னது நிஜமா என நினைக்கத் தோன்றிற்று.

பேசிக் கொண்டிருந்த சரவணனை கைகளால் வளைத்து தன் நெஞ்சினில் சாய்த்தபோது அவன் எந்தவித எதிர்ப்பும் காட்டாதது அவளை ஆச்சரியப்படுத்தியது.

ஒருகணம் கண்களால் லேசாய் திடுக்கிட்டுப் பார்த்தவன் அவள் சொன்ன பதில் கேட்டு சமாதானமடைந்தவனாய்



நெஞ்சில் புதைந்து கொண்டான்.

ஆனால் நிர்மலாவுக்குத்தான் என்னவோபோல் இருந்தது.

கட்டிய கணவனையே தாஜா செய்வதுபோல் மயக்குவது போல் இதென்ன கூத்து என நினைத்தாள்.

ஆனால் அவள் அப்படிச் செய்த அரவணைப்பு செய்கை அவனுக்குள்ளும் ஒருவித தடுமாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதைக் கவனித்தாள்.

விடாது பேசிக் கொண்டிருந்தவன் சட்டென நிறுத்தி அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்தான். தொடர்ந்து நிம்மியைப் பற்றிய பேசிக் கொண்டிருப்பது உனக்கு எரிச்சலாய் போராடிப்பதாய் இருக்கிறதா? என்றான். அக்கறையாய்.

அவள் காது மடல்களை வேகமாய் அசைத்து மறுப்பாய் தலையசைக்கவும் நீளமான பெருமூச்சுடன் அவனே தொடர்ந்தான்.

நிர்மலா, நான் ஏந் இப்படி நிம்மியைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறேன் என்றால்.... அதற்குப் பின்னணி நான் செய்து கொண்ட பயங்கர கற்பனைகள்தான்....

கற்பனைகளா....?

ஆமாம் நிர்மலா. நிம்மிக்கும் எனக்கும் காதல் ஆரம்பித்த உடனே எனது கற்பனைகளை விரித்து பல கனவுக்கோட்டைகளை மனசுக்குள் கட்டியிருந்தேன். நானும் நிம்மியும் கல்யாணம் செய்து கொண்டு ஜாலியாய் ஊர் ஊராய் சுற்றுவதுபோல் நிறைய குழந்தைகளைப் பெற்றுக் கொண்டு அந்த மழலைகளோடு பேசி விளையாடி நேரம் போவது

தெரியாமல் கொட்டமடிப்பதுபோல் இன்பம் ஒன்றே எங்களது வாழ்க்கை என்பதுபோல் அலைவது என்றெல்லாம் பல விஷயங்களை தினம் தினம் கற்பனை செய்து ரசித்திருந்தேன். ஆனால் இப்போது எல்லாமே நேர்மாறாக நடந்து விட்டதால் அந்தக் கனவு கோட்டைகளிலிருந்து வெளிவருவது சற்று சிரமமாயிருக்கிறது.

அவன் அப்படிச் சொல்லச் சொல்ல அவன் தலையில் ஓங்கிக் குட்டலாம்போல் அவளுக்கு இருந்தது.

குத்துக் கல்லாய் உட்கார்ந்து அவளை நெஞ்சினில் தாங்கிப் பிடித்திருக்கும் அவள் ஞாபகம் மட்டும் ஏன் அவனது இந்த மண்டைக்குள் வர மறுக்கிறது என கொதிப்பாய் நினைத்தாள்.

ஆனால் தொடர்ந்து சரவணனின் முகம் ஆழமான சோகத்தை பிரதிபலித்ததும் அவள் தனது கோபத்தை எல்லாம் விட வேண்டியதாயிற்று.

கதைகளில், சினிமாப் படங்களில் சொல்வதுபோல் ரோமியோத்தனமாய் நிம்மியை நினைத்து இவன் நிறைய காதல் கோட்டைகள் கட்டியிரக்கிறான். அந்த நினைவுகளிலிருந்து வெளிவர அவனுக்கே சிரமமாய்த்தான் இருக்கிறது என்பதும் அவளுக்குப் புரிந்தது.

எதையோ நினைத்தவள், அவனைத் தொடர்ந்து பேச விட்டால்அப்படியே நிம்மியை நினைத்தே உருகிக் கொண்டிருப்பான் என்று உணர, அப்படியே அவனை நெஞ்சோடு மேலும் இறுக்கமாய் பிடித்துக் கொண்டு, கொஞ்ச நேரம் எதுவும் பேசாமல் அப்படியே இருங்கள்.... என்றவள் அவன் தொடர்ந்து ஏதோ சொல்ல வந்ததும் தனது பிஞ்சு விரல்களை



மென்மையாய் அவன் உதட்டில் வைத்து எனக்காக ப்ளீஸ்.... என்றாள் கெஞ்சலுடன்.

சரவணன் அவள் சொல்வதைக் கேட்டு பெட்டிப் பாம்புபோல் கண்களை மூடி அப்படியே இருந்தான். மௌனமாய் கடந்த அந்த நிமிடங்கள் இருவருக்கே புதிதாய் வினோதமான அமைதியொன்றை ஏற்படுத்தியது.

பளபளப்பான சிகையுமாய் அசாத்திய ஆண்மையும், பெரும் நிம்மதி கிடைத்ததுபோல் தன் நெஞ்சில் சாய்ந்து கண்களை மூடிக்கிடக்கும் அவனையே வாஞ்சையுடன் பார்த்தாள். வாழ்நாள் முழுவதும் இந்த சுகமான அரவணைப்பிலே மெய்மறந்து இருந்துவிடலாம் என்றுகூட அவளுக்குத் தோன்றிற்று.

அவள் அப்படி நினைத்துக் கொண்டிருக்கையிலே சரவணன் கண்களை விரித்தவன் மெல்ல நிமிர்ந்தான்.

நிர்மலா.....

இம்முறை அவன் தன் பெயரை விளிப்பதிலே ஒருவித இனிமை தெரிவதை அவள் உணர்ந்தாள். மை விழிகளை விரித்து அவள் படபடத்துப் பார்த்தபோது அவன் அவள் முகத்தையே ஆழமாய்ப் பார்த்தான்.

நிர்மலா... நீயும் அழகுதான்... அழகு என்றால் எப்படித் தெரியுமா? ரதிபோல் அழகு என்பார்களே, அப்படி ஓர் அழகு. உன்னுடைய அழகான மைவிழி கண்களையும் துடித்து மலரும் மென்மையான சிரிப்பையும் நான் ரொம்பவும் ரசித்திருக்கிறேன் தெரியுமா? என்றபோது அவளை நம்ப முடியாமல்தான் பார்த்தாள்.

சும்மா ஒப்புக்காக சொல்கிறான் இவன் என்ற அவளது பார்வையின் அர்த்தம் உணர்ந்தவன் போல் சரவணன் சிரித்தவன் என்ன நம்ப முடியவில்லையா நிர்மலா? நீ நம்பும்படியாய் சில விஷயங்களைச் சொல்கிறேன்... உன்னால் புரிந்து கொள்ள முடியும்... என்றவன் அதே சிரிப்புடன் தொடர்ந்தான்.

நிர்மலா.... நான் முதன் முதலாய் உன்னை அந்த அலவலக இன்டர்வியூ அறையில் பார்த்தபோது நீ ரோஸ் நிற ஜரிகை பார்டர் சேலை ஒன்றை கட்டியிருந்தாய் சரிதானே?

இதையெல்லாம் இவ்வளவு உன்னிப்பாய் கவனித்து ஞாபகம் வைத்திருக்கிறானா? என அவள் இனிமையாய் திகைப்பதற்குள் தொடர்ந்தவன், உன்னுடன் அறிமுகமாகிய மறுநாள், நீ வந்தபோது கறுப்பு வண்ண சேலையில் உன் தங்க நிற அழகு மின்ன தேவதை போல் வந்தது, என்னைப் பார்த்ததும் முகம் மலர சந்தோஷமாய் உன் முத்துப் பற்களைக் காட்டிச் சிரித்தது எல்லாம் எல்லாமே சுகமான தென்றல் போல் பரபவசமாய் என்னுள் ஓடிக்கொண்டு இனிமையாய் என்னுடைய ஞாபகத்தில் இருந்து கொண்டுதான் இருக்கிறது நிர்மலா....

அவன் சொல்லச் சொல்ல அவளுக்கு தட்டாமாலை சுற்றி அப்படியே ஒரே தூக்காய் இன்பக் கடலில் தள்ளி விட்டது போல் ஆயிற்று. இவனா... இப்படியெல்லாம் பேசுகிறான்...? இவனா நம்மை இப்படியெல்லாம் ரஸித்திருக்கிறான்...?

என்றெல்லாம் பரவசத்துடன் நினைத்தவள், தன்னை மீறி சிவந்த முகத்தையும், ஏற்பட்ட அளவற்ற பூரிப்பையும் அவன் முன்னால் மறைக்க சிரிப்புடன் தலைகவிழ்ந்து ரொம்பவும்தான் சிரமப்பட்டாள்.



சரவணன் சொல்ல இன்னும் நிறைய விஷயம் வைத்திருப்பதுபோல் தொடர்ந்து கொண்டிருந்தான்.

நிர்மலா இதையெல்லாம் ஏன் உன்னிடம் சொல்கிறேன் என்றால் நீயும் என் மனதில் இருக்கிறாய் அதுவும் ஆழமாய் என்பதை உனக்கு உணர்த்தத்தான். மேலும் நீ இப்போது மனைவியாகி விட்டாய். நம் கணவன், மனைவி பந்தம் பிரிக்க முடியாது ஒன்று... ஆனாலா;... இழுத்தவன் சிறிது நேரம் நிறுத்திவிட்டு அவனே தொடர்ந்தான்.

நிம்மி விஷயம் வேறு... அவள் மேல் மோகமோ எந்தவித மயக்கமோ எனக்கு இந்த நிமிடம்கூட கிடையாது. என்ன ஒருவித குற்ற உணர்ச்சி அடிக்கடி வாட்டுகிறது. என்னால் மனம் அழைகழிந்து ஒரு பெண்ணின் வாழ்க்கை சீரழிவாகி விட்டதே என்ற மனம் பதைக்கிறது. அப்படி மனம் பதைக்கும்போது


அடுத்த **நந்தினி** மாத நாவலில்

**அகிலாகோவிந்த்**



எழுதும்

**"கண்ணே கலைமானே..."**

அட்டகாசமான நாவல்..! படிக்க தவறாதீர்கள்..!

பழைய காதல் நினைவுகள் எல்லாம் நீருற்றாய் பீறிட்டுக் கிளம்பி என்னை திணற வைக்கிறது. இதுதான் இப்போது என்னுள் நடந்த கொண்டிருக்கிறது நிர்மலா....

சத்தியப் பிரமாணம்போல் அவன் அனைத்தையும் சொல்லி முடிக்க அவனை திரும்பவும் நெஞ்சினில் சாய்த்து இறுக்கியவள் சிவப்பேறிய கன்னங்களோடு அவன் உதடுகளை நோக்கி குனிந்தாள்.




மறுவாரம் முழுவதும் ஒரு முக்கியமான பெரிய ஆர்டர் கிடைத்துவிட்டதால், அதற்கான திட்ட அறிக்கையை தயார் பண்ண தனது இரண்டு உதவியாளர்களுடன் வேலை வேலை என்று இரவு பகல் பாராமல் அலைந்தான் சரவணன்.

நிர்மலாவும் தன் பங்குக்குச் கூடமாட வேலைகளில் ஒத்தாசை செய்தாள். தேவையான கம்பெனி குறிப்புகளை நெட்டிலிருந்து டவுன்லோடு செய்வது, சேகரித்த டேட்டா விவரங்களை சரிபார்த்து ஒப்பிடுவது, உடனுக்குடன் தகவல்களை இமெயில்கள் மூலம் அனுப்புவது என வீட்டிலிருந்த படியே சிஸ்டத்தை இயக்கி வேலைகளைச் செய்தாள்.

பரபரவென அந்த வாரம் முழுவதும் சரவணன் அலைந்ததால் நிம்மி பற்றிய நினைப்போ பேச்சோ அவனிடம் கொஞ்சமும் வரவில்லை.



ஆனால் மறுவாரம் ஆரம்பமானதும் நிம்மி விஷயம் புது வடிவத்தில் பெரிய தலைவலியாய் வந்து அலைக் கழிக்கும் என இருவரும் கொஞ்சமும் நினைக்கவில்லை.

அன்று அலுவலகம் திறந்த கொஞ்ச நேரத்திலேயே சரவணனைத் தேடி அங்கு வந்து விட்டாள் நிம்மி. அழுது சிவந்த கண்களுடன் கர்ச்சிப்பை நனைத்தபடி அவள் சொல்லச் சொல்ல ஆடித்தான் போனான் சரவணன்.

சரவணனைப் பார்க்காமல் அவளால் இருக்க முடியவில்லையாம். அவன் நினைவு வாட்டுகிறதாம். அதனால் பார்க்க ஓடிவந்து விட்டாளாம்.

பிழியப் பிழிய அழுவது போல் கண்களை கசக்கிக் கொண்டு நிம்மி சொல்லும்போது சரவணன் ஒருகணம் ஆடித்தான் போனான்.

நல்ல வேளையாய் அந்நேரம் பார்த்து நிர்மலாவும் அலுவலகத்தில்தான் இருந்தாள்.

நிம்மி... நெளிந்து குனிந்து, தளுக்கி மினுக்கி சொன்ன விதத்திலே இவள் பெரிய சாகஸக்காரி, ஏதோ திட்டத்துடன் தான் இப்படியெல்லாம் நாடகமாடுகிறாள் என்பதை புரிந்து கொண்டாள் நிர்மலா.

ஆனால் அதை கொஞ்சமும் உணராமல், அவள் வேதனையில் துடிக்கிறாள் என்றெண்ணி அவளை பரிதவிப்புடன் நோக்கும் அதைவிட்டு விட்டு சரவணன் அவளுக்காக வருந்துகிறானே என குமைந்தாள்.

இந்த விஷயத்தில்தான் தலையிடாமல் இருப்பதே மேல் என்ற எண்ணத்துடன் இம்மென்று இறுக்கமாய் உதடுகளை

மூடிக் கொண்டாள்.

கண்களை மட்டும் அகல விரித்து நிம்மி இன்னும் என்ன கூத்தடிக்கப் போகிறாள் என கவனித்தாள்.

நிம்மியும் அந்நேரம் பார்த்து நிர்மலா அலுவலகத்தில் இருந்ததை எதிர்பார்க்காததால் அவளுக்கு நிர்மலா முன்னிலையில் சரவணனை கெஞ்சும் தொனி அவமானமாகவும் இருந்தது.

அரை மணி நேரம் பிழியப் பேசி ஒருவாறு தன் சோகக் கதையெல்லாம் சொல்லி முடித்து, மூக்கைச் சிலுப்பி, கர்ச்சிப்பால் கண்களை அழுத்திக் கொண்டு நிம்மி கிளம்பி விட்டாள்.

போகும்போது மறக்காமல் சரவணனை கெஞ்சல் பார்வை பார்த்தவள், சரவணன் இன்று மாலை அவசியம் நீங்கள் என்னைப் பார்க்க வர வேண்டும். இல்லாவிட்டால் மனமுடைந்து நான் என்ன செய்து கொள்வேன் என எனக்கே தெரியாது.... நிம்மி சொல்ல சரவணன் பலமாய் தலையாட்டியபடி, கண்டிப்பாய் வருகிறேன் நிம்மி... என உறுதியும் கொடுத்தான்.

நிர்மலாவுக்கு அப்போதே அவளது கழுத்தை நெறித்து, துவைத்து தொங்கவிட்டு விடலாம்போல் இருந்தது. என்ன தைரியமிருந்தால் கட்டிய மனைவி பக்கத்தில் இருக்கும் போதே மாலையில் என்னைப் பார்க்க வா... என சரவணனுக்கு அழைப்பு விடுப்பாள். இப்படியும் வெட்கமில்லாமல் சில ஜென்மங்கள் அலைகிறதே என கொதிப்பாய் நினைத்தாள்.

அதற்குள் சரவணன் எழுந்து நிர்மலா பக்கம் வந்து சோகமான முகத்துடன் அமர்ந்தான்.



இந்த நிம்மி பாவம்... நிர்மலா அவளுக்கு எவ்வளவு வேதனைகள் பார்.... என ஆரம்பித்ததும், அடடாடா... இப்படியொரு சூப்பர் இளிச்சவாயத்தனமா... இவனுக்கு? என அதிசயத்துடனே அவனைப் பார்த்தாள் நிர்மலா.

அப்படியானால் மாலை சென்று நிம்மியை சந்திக்கப் போகிறீர்களா சரவணன்....? என்றாள்.

அவள் பயந்தது போலவே தலையசைத்தவன், ஆமாம் நிர்மலா... அவளை சந்திக்கப் போகிறேன். ஆனால் தனியாக அல்ல... நீயும் என்னுடன் வருகிறாய்... என்றபோது அவளுக்கு கொஞ்சம் நிம்மதியாகவும் இருந்தது.

அதற்குப் பின் சரவணன் எழுந்து அலுவலக வேலைகளில் ஆழ்ந்து விட்டான்.

நிர்மலாவின் மனதோ பெரிதாய் விழித்துக் கொண்டு யோசிக்க ஆரம்பித்துவிட்டது.

இந்த நிம்மி விஷயத்தை இப்படியே விடக்கூடாது. ஏதாவது செய்தாக வேண்டும். இல்லாவிட்டால் பெரும் ஆபத்தில் போய் முடிந்துவிடும் என தீவிரமாய் சிந்திக்க ஆரம்பித்தாள்.

அவள் சிந்திக்க சிந்திக்க அவள் மனதில் அருமையான வழி ஒன்றும் புலப்பட்டது.




நிர்மலா நிம்மியின் சுயரூபத்தை சரவணனுக்கு உணர்த்த முதல் வேலையாய் நிம்மியினால் கல்யாணம் நிறுத்தப்பட்டு, பாதிக்கப்பட்ட கல்யாண மாப்பிள்ளையைத் தேடிப் போனாள்.

சேகர் எக்ஸ்போர்ட்ஸ் என்று சொல்லப்படும் ஏற்றுமதி நிறுவனம் ஒன்றின் உரிமையாளராய் அந்த மாப்பிள்ளை இருந்தான். அவன் பெயர்தான் சேகர்.

நிர்மலா தேடிச் சென்றபோது அந்த எக்ஸ்போர்ட் அலுவலகம் ஆட்கள் யாருமில்லாமல் வெறிச்சோடி இருந்தது. ஒரே ஒரு வயதான குமாஸ்தா லென்ஸ் கண்ணாடி வழியாய் கண்களை இடுக்கிக் கொண்டு கணக்குகளை பார்த்துக் கொண்டிருந்தார்.

நிர்மலா அவரிடம் போய் பணிவாய் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டாள்.

நிதானமாய் பேச்சுக் கொடுத்து நிம்மி, சேகரின் கல்யாண விஷயத்திற்கு வந்தாள்.

கல்யாணம் ஏன் நின்று போனது, அதன் உண்மையான காரணம் என்ன என்று விசாரித்தாள்.

குமாஸ்தா முதலில் கொஞ்சம் தயங்கியவர், நிர்மலாவின் கள்ளங்கபடமற்ற மென்மையான சிரிப்பைப் பார்த்து படபடவென சொல்ல ஆரம்பித்து விட்டார்.



அது வேற ஒன்னுமில்லேம்மா.. எங்களது முதலாளி சேகருக்கு எக்ஸ்போர்ட் பிஸினஸில் ஏற்பட்ட பெருத்த நஷ்டம்தான் அவர் கல்யாணத்தையே நிறுத்திவிட்டது....

என்ன நஷ்டமா...?

ஆமாம்மா... வெளிநாட்டுக்கு அனுப்பிய சரக்குகள் எல்லாம் தட்ப வெப்ப சூழ்நிலை காரணமாக அழுகிவிட்டது. அதனால் சரக்குகளுக்கு உரிய பணத்தை வெளிநாட்டுக் கம்பெனி எங்களுக்குத் தர மறுத்துவிட்டது. அதனால் ஒரே நாளில் பெருத்த நஷ்டம் ஏற்பட்ட எங்களது எக்ஸ்போர்ட் கம்பெனியே மூடும் அளவுக்கு போய்விட்டது. இந்த விஷயமெல்லாம் கல்யாண நாளன்றுதான் மணப்பெண் நிம்மிக்கு தெரிய வர, நிம்மி கொஞ்சமும் யோசிக்காது உடனே கல்யாணத்தை நிறுத்தும்படி சொல்லிவிட்டார். உடனே கல்யாணமும் நின்று போனது. இதுதான் கல்யாணம் நின்று போனதற்கான உண்மையான காரணம்....

அவர் சொல்லச் சொல்ல நிர்மலாவுக்கு எல்லாம் புரிந்து விட்டது.

கட்டிக்கப் போகிறவன் கோடீஸ்வரன் அல்ல... ஓட்டாண்டியாகப் போகிறான் என்பது தெரிந்தும் இந்த பணத்தாசை பிடித்த நிம்மி உடனே கல்யாணத்தை நிறுத்தியிருக்கிறாள்.

எல்லாவற்றையும்விட முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல் இந்த விஷயத்தை மறைத்து, சரவணனிடம் காதல் வேதனையைத் தாங்க முடியாமல் கல்யாணத்தை நிறுத்தியதுபோல் நாடகமல்லவா போட்டிருக்கிறாள்.

எவ்வளவு பெரிய சாகஸக்காரி இந்த நிம்மி...?

நிர்மலா கொதிப்பாய் நினைத்தவள், தகவல்கள் தந்த அந்தப் பெரியவருக்கு அன்பு கனிய நன்றி கூறிவிட்டு அங்கிருந்து கிளம்பினாள்.

அவளுக்கு ஒரு விஷயம் தெளிவாகப் புரிந்து விட்டது.

நிம்மியின் குறி.... சரவணன் அல்ல, பணம்தான்!

சரவணனைவிட பெரிய பணக்காரன் ஒருவன் அவள் வலையில் விழுந்தால் போதும் அவள் கவனம் மாறிவிடும். சரவணனை விட்டுவிட்டு அவனைப் பிடித்துக் கொள்வாள். அப்படியானால்...?

இதற்கு என்ன செய்ய?

நிர்மலா தீவிரமாய் யோசித்தாள்.

யோசிக்க... யோசிக்க... அவளுக்கு நாடகக்குழு ஒன்று வைத்து நடத்தும் பள்ளித்தோழி மீனாவின் ஞாபகம் வந்தது.

மீனாவின் கணவரும் நாடக நடிகர்தான். இருவரும் கலை நிகழ்ச்சிகளும், சபாக்களில் சமூக விழிப்புணர்வு நாடகங்கள் நடத்துவதை தொழிலாய்க் கொண்டிருந்தனர்.

லயன் டவுனில் இருக்கும் திருமகள் காலனியில் அவர்களது வீடு இருக்க, அவர்களைத்தேடிப் போனாள் நிர்மலா.

மீனாவைச் சந்தித்து நிம்மி விஷயத்தைச் சொன்னபோது அதற்கு ஒரு அருமையான வழியைச் சொன்னாள் மீனா.






ஒரு வாரம் கழிந்தது.

நிம்மி வழக்கமாக செல்லும் அந்த ஐந்து நட்சத்திர ஓட்டல் முன் அந்த பளபளப்பான லான்ஸர் கார் நின்றது.

உள்ளிருந்து உயர்ரக ஆடைகளுடன் அந்த இளவயதுக்காரன் இறங்கினான். வேகமாய் நடந்து பார்ட்டிகள், கூத்துக்கள் நடக்கும் டிஸ்கோத்தே ஹாலுக்குச் சென்றான்.

கோட்சூட்டுடன் கம்பீரமாய் கண்ணாடிக் கதவுகளைத்திறந்து டிஸ்கோத்தே ஹாலுக்குள் நுழைந்தபோது அனைவரின் கண்களும் அவனைப் பார்வையால் மொய்த்தன.

அவன் மெல்லதன் விழிகளால் தேடி சற்று ஓரமாய் இருந்த இருக்கையொன்றில் போய் அமர்ந்து கொண்டான்.

அவனை மொய்த்த அத்தனை கண்களும் பார்வையைத் திருப்பிக் கொள்ள... ஒரே ஒரு ஜோடிக்கண்கள் மட்டும் தொடர்ந்து அவனைப் பார்த்தது அவனது கம்பீரத்தை பார்வையால் பருகி மயங்கியது.

அது.. நிம்மியுடைய கண்கள்...

நிம்மி அவனையே உற்றுப் பார்த்தாள் அவனது பகட்டான ஆடைகளும், அசாத்திய அலட்சியமான ஆண்மையும் அவன் பெரிய பணக்காரன் என்பதை உணர்த்தியது.

தனது மயக்கும் விழிகளை மேலும் ,அகலமாய் விரித்தவள் அதற்குமேல் அடங்க மாட்டாதவளாய் வலிய அவனைத் தேடிப் போனாள்.

தன் அத்தனை பற்களையும் காட்டி இளித்தபடி அவனது பக்கத்தில் போய் உட்கார்ந்தாள்.

தனது உடம்பை நெளித்து சுளித்து குழைந்தாள். வெட்கமில்லாமல் பேச்சுக் கொடுத்தாள்.

அவன் அவளை கொஞ்சமும் சட்டை செய்யாமல் இருந்தவன் நிம்மி தொடர்ந்து பேச்சுக் கொடுக்க மெல்ல அவள் பக்கம் பார்த்தான்.

அவ்வப்போது அவனும் ஏதாவது பேசினான்.

நிம்மி அவன் எது சொன்னாலும் பெரிய ஹாஸ்யத்தைக் கண்டதுபோல் விழுந்து விழுந்து சிரித்தாள்.

இருவரும் அரை மணி நேரத்தில் நன்றாகப் பேசிப் பழகி இரவு டின்னரை ஒன்றாகச் சாப்பிடும் அளவுக்கு நெருக்கமாகி விட்டனர்.

அவன் தன் பெயர் வாசு எனவும் கோயம்புத்தூரில் நிறை நூற்பாலைகள் வைத்திருப்பதாய் சொல்ல, பெரும் அதிசயமாய் அதைக் கேட்டு வாய் பிளந்தாள் நிம்மி.

அவனது பணக்காரத்தனமும் தாராளமாய் அவன் கைகளில் புழங்கிய கரன்ஸிகளையும் கண்டு அவள் அதிரத்தான் செய்தாள்.

இவன் சரியான புளங்கொம்பு இவனை விடக்கூடாது என அவளது மூளையில் உரைத்திருக்க வேண்டும்.



தொடர்ந்து அவன் பின்னாலேயே அலைந்தாள். அவனை மயக்கி தன் வலையில் விழ வைக்க தன்னை விதவிதமாய் அலங்கரித்து செயற்கை அழகுடன் அவனுக்கு போஸ் கொடுத்தாள். அவனுக்காக உருகுவது போல் பசப்பு வார்த்தைகளை அள்ளி வீசினாள். எல்லாம் நிம்மி எதிர்பார்த்த மாதிரியே நடந்தது.

அவள் எதிர்பார்த்தபடி நடந்து தொழிலதிபன் வாசு அவளது காதல் வலையில் விழுந்ததும், மெல்ல அடுத்து வலையான கல்யாணப் பேச்சை ஆரம்பித்தாள் நிம்மி.

வாசு, கல்யாணமா.. அதெல்லாம் எதற்கு? என முதலில் மறுத்தவன், நிம்மியின் வற்புறுத்தலால் மெல்ல சம்மதிக்கவும் செய்தான்.

ஒருவழியாய் எல்லாம் பேசி முடித்து கல்யாண தேதியும் குறித்தாயிற்று.

வாசு வெட்ஸ் நிம்மி...!

நாட்கள் குறிக்கப்பட்டு கல்யாண அழைப்பிதழ்கள் அடிக்கப்பட்டு வேலைகள் மளமளவென தொடங்கியது.

நிம்மி சரவணனைவிட பெரும் பணக்காரனைப் பிடித்து விட்ட மகிழ்ச்சியில், முகமே வெடித்துவிடும் அளவு சந்தோஷத்துடன், முதல் பத்திரிகையை சரவணனிடமே கொடுக்க வந்தாள்.

சரவணன் முகம் மலரும் புன்கையுடன் அதை வாங்கி நிஜமாகவே சந்தோஷப்பட்டான். பெரும் பிரச்சனை தீர்ந்த சந்தோஷத்தில் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

ஆனால், வாசுவுடன் நடக்கவிருக்கும் அந்தக் கல்யாணமும் நின்று போகும் என்று நிம்மி அப்போது உணரவில்லை. ஆனால் தோழி மீனா உதவியுடன் வாசுவிற்கு தொழிலதிபர் வேஷம் செய்திருந்த நிர்மலா அதை நன்கு உணர்ந்திருந்தாள்!




சரவணனுக்கு நிம்மி இப்படி மனம் மாறியது ஆச்சரியமாகத்தான் இருந்தது.

காதல் வேதனை... மறக்க முடியவில்லை... பார்க்காமல் இருக்க முடியவில்லை. அது இதுவென பேசி டயலாக்கு களால் டபாய்த்தவள் திடீரென எப்படி மனசு மாறினாள்?

சரவணன் திகைத்துப் போய் குழம்ப, அவன் குழப்பத்தை போக்குபவளாய் பக்கத்தில் சிரித்த முகத்துடன் வந்து அமர்ந்தாள் நிர்மலா.

புரியாமல் விழித்த சரவணனிடம், நீங்கள் நினைப்பது போல் நிம்மி உங்களைக் காதலிக்கவில்லை. உங்கள் பணத்தைத்தான் காதலித்தாள். அதனால்தான் உங்களைவிட பெரிய பணக்காரர்கிடைத்ததும் உங்களை உதறிவிட்டு வாசுவைப் பிடித்துக் கொண்டாள். ஆனால்....

நிர்மலா பீடிகையுடன் நிறுத்த சரவணன் புரியாமல் பார்த்தான்.



ஆனால், அவள் நிம்மிக்கும் வாசுவுக்கும் ஒருபோதும் கல்யாணம் நடக்கப் போவதில்லை சரவணன்... என்றாள்.

தீர்க்கமாய் நிர்மலா சொல்ல சரவணன் அப்படியே திடுக்கிட்டுப் போனான்.

என்ன சொல்கிறாய் நிர்மலா...? என அவன் அதிர்ந்து கேட்க, தான் மீனாவுடன் சேர்ந்து போட்ட வாசுவின் பெரும் தொழிலதிபர் திட்டத்தை விவரிக்க ஆரம்பித்தாள் நிர்மலா.

நிம்மியின் வீடு.

தற்செயலாய் வீட்டு முன்புறம் வந்த நிம்மி வீட்டின் கிரில் கேட்டைத் திறந்தபடி நுழைந்த அந்த மூவரைப் பார்த்து அதிசயிக்கத்தான் செய்தாள்.

அது... சரவணன், நிர்மலா. கூடவே தொழிலதிபர் வாசு,

சரவணன் நிர்மலாவுடன் சிரித்தபடியே வரும் வாசுவைக் கண்டு திகைக்கவே செய்தாள்.

இவர் எப்படி அவர்களுடன் சேர்ந்தார்? முன்பே பழக்கமா என்றெல்லாம் குழம்பத்தான் செய்தாள்.

ஆனால் சிரித்தபடியே நிம்மியை நெருங்கிய மூவரும் அவள் முன்னால் போய் கைகளைக் கட்டிக் கொண்டனர்.

சரவணன் நிம்மியையே உறுத்துப் பார்த்தான்.

நிம்மி, நீ கல்யாணம் செய்ய சம்மதித்திருக்கும் இந்த வாசு தொழிலதிபர் இல்லையென்றால், கோடீஸ்வரர் இல்லையென்றால் என்ன செய்வாய்.... சொல்லு...!

சரவணன் சொல்ல, அதிர்ந்து போய் பார்த்தாள் விம்மி.

என்ன சொல்கிறீர்கள் சரவண்? உண்மைதான் நிம்மி! நீ நினைப்பது போல் வாசு பெரும் தொழிலதிபர் இல்லை. சாதாரண நாடக நடிகர். உனது பேராசையான உண்மையான சுயரூபத்தை வெளிக்கொண்டு வர நிர்மலா நடத்திய நாடகம். உன்னுடைய காதல் வேஷம். என்னை ஏமாற்றியது எல்லாம் கலைந்து விட்டது நிம்மி! சரவணன் தீர்க்கமான குரலில் சொல்லச் சொல்ல அப்படியே அதிர்ந்து உச்சக்குரலில் அலற ஆரம்பித்தாள் நிம்மி.




புயலடித்து ஓய்ந்ததுபோல் எல்லாம் முடிந்து தெளிவு பெற்றிருந்த சரவணன், தன் முகத்தை எங்கே கொண்டு வைப்பது என்ற அசட்டு அழகுடன் நிர்மலா முன் நின்று கொண்டிருந்தான்.

அவனை அப்படியே அரவணைத்து அவனது தலையை தனது நெஞ்சோடு சாய்த்தாள் நிர்மலா.

நிர்மலா... நான்..... என்று ஏதோ பேச ஆரம்பித்தவனின் உதடுகளில் தனது பிஞ்சு விரல்களை மென்மையாய் வைத்தவள், ப்ளீஸ்... எனக்காக கொஞ்ச நேரம் எதுவும் பேசாமல் அப்படியே இருங்கள்... என்றபடி அவனை மேலும் இறுக்கமாய் பிடித்துக் கொண்டு தன் நெஞ்சுக்குள் பொதிய



வைத்தாள்.

சரவணன் அவள் சொல்வதைக் கேட்டு பெட்டிப்பாம்பு போல் கண்களை மூடி அப்படியே இருந்தான். மௌனமாய் கடந்த அந்த நிமிடங்கள் இருவருக்குமே வினோதமான அமைதியொன்றை ஏற்படுத்தியது.

நிர்மலா... மெல்ல பிடிகளைத் தளர்த்தி அவன் முகம் நிமிர்த்தினாள். குறும்பும் குறுகுறுப்புமாய் அவனைப் பார்த்தபடி மன்மதக்குஞ்சே! என்றாள்.

சரவணன் கண்களை விரித்துப் பார்த்தான். தன்னைக் கேலியுடன் பார்க்கும் அவளைக் கண்டு அழகாக வெட்கப் பட்டான். நிர்மலா தொடர்ந்தாள்.

மன்மதக் குஞ்சே... நிம்மியின் மேலான காதல் தீர்ந்துவிட்டதா மன்மதக்குஞ்சே? இல்லை இன்னும் இருக்கிறதா மன்மதக்குஞ்சே.... ராகத்துடன் பாடி அவள் கிண்டல் செய்ய... ஒருவித குறுகுறுப்புடன் தெளியத்தான் செய்தான் சரவணன்!

மறுபடியும் அவளை நேருக்கு நேர் பார்க்க முடியாதவனாய் தலையைத் தாழ்த்தப் போக தனதுமருதாணி விரல்களால் அவசரமாய் அவன் முகம் நிமிர்த்தித, இந்த வெட்கமெல்லாம் எனிடம் ஆகாது. பதில் சொல்லுங்கள்...! என்றாள் பொய்க்கோபத்துடன்.

அவன் நிமிர்ந்து முகத்தை லேசாய் திருப்பியபடி ஏதோ சொல்ல வர, ம்ஹூம்... இப்படியல்ல நேருக்கு நேராய் என் முகத்தை என் கண்களைப் பார்த்து... என்றாள் அவசரமாய் அதட்டல் செய்தவாறு

சரவணன் அவளது அதட்டலை வெகுவாய் ரஸித்து சிரித்தவன், நிர்மலா, நிம்மி மயக்கம் எனக்கு எப்பவோ தெளிந்து விட்டது. போயும் போயும் இப்படி ஒரு பெண்ணைக் காதலித்து காதல் பித்துப் பிடித்துப் போய் அலைந்திருக்கிறோமே... என்ற குற்ற உணர்வுதான் என்னை வாட்டுகிறது என்றவன் நிமிர்ந்து, நீயே சொல் நிர்மலா, அவளெல்லாம் ஒரு ஜென்மமா....? எப்படியெல்லாம் என்னை ஏமாற்றியிருக்கிறாள்...? என்றான் ஆதங்கமாய்.

நிர்மலாவோ பதிலுக்குப் புருவம் உயர அவனைக் குறுகுறுப்பாய் பார்த்தாள்.

அவள் ஏமாற்றியது இருக்கட்டும். ஆனால்....

சொல் நிர்மலா...

அந்த குரங்கு மூஞ்சியை, இந்த மன்மத மூஞ்சி காதலித்தது. எங்கியது எப்படி அதுதான் புரியவில்லை... என்றாள்.

என்ன சொன்னாய் குரங்கு மூஞ்சியா...? நல்ல பெயர்தான் அவளுக்கு என சரவணன் அதை ரஸித்தவன் மெல்ல தனது கரங்களால் அவளது காது மடல்களை ஆட்டி வெட்கத்தோடு, ப்ளீஸ் பழசையெல்லாம் கிளறாமல் அப்படியே விட்டுவிடேன் நிர்மலா. இப்போது புதிதாய் புத்தம் புதிதாய் இந்த மன்மத குஞ்சு ஒருவளை காதலிக்க ஆரம்பித்திருக்கிறது தெரியுமா.... என்றான்.

யாராம் அது...? வேண்டுமென்றே உதட்டைச் சிலுப்பி தெரியாததுபோல் முகத்தை வைத்துக் கொண்டு அவள் கேட்டாள்.

அவள் பெரிய அழகியாம்.. ரதிபோல் அழகு அவளுக்காம். கண்களில் அழகாக மை வைத்திருப்பாளாம். கன்னக்குழிச் சிரிப்பால் பார்ப்போரை மயக்குவாளாம். இன்னும்...

அவன் தொடர படபடவென் செல்லமாய் அவன் தலையைக் குட்டி அலை அலையாய் படர்ந்த அவனது சிகையை கலைத்தவள், இந்த ஐஸ் வேலையெல்லாம் இங்கு வேண்டாம்... என்றாள் பொய்க்கோபமாய்.

ஐயோ, நிஜம் நிர்மலா! நிஜமாகவே... நீ கொள்ளை அழகு. உன்னை இந்த நிமிடம் முதல் தீவிரமாய் காதலிக்க ஆரம்பித்து விட்டேன். உனக்கு சந்தேகமிருந்தால் என் கண்களைப் பார். அது உன்னுடன் பேசும் உனக்கு ஒரு சேதி சொல்லும்....

அவன் உறுதியான குரலில் சொல்ல, அப்படியா? இது என்ன புதுக்கதை? என்றபடி நிர்மலா தன் மைவிழிக் கண்களால் அவனது விழிகளை உற்றுநோக்கினாள்.

படபடத்த இமைகளுடன் கூடிய அவளது முகம்தான் அதில் தெரிந்தது. சரவணன் தொடர்ந்து, நிர்மலா நீ என் கருவிழிகளின் கண்மணியுள் எவ்வளவு அழகாய் தெரிகிறாய் பார்த்தாயா? இனி நீதான் என் கண்ணின் நிலா. என் காதல் கண்ணிலா... என்றான்.

அவன் சொன்னதும் தன் அழகான தலையை சிலுப்பி, அடாடா... பெரிய கவிஞர்போல் வர்ணனை வேறு.. என அவன் காதுகளைக் கிள்ளியவள் திடுமென ஞாபகம் வந்தவளாய் துடித்து நிமிர்ந்தாள்.

குனிந்து கைகளால் தொங்கிக் கொண்டிருந்த தாலிச் சரடை எடுத்து அவன் முன் காட்டினாள்.

இப்படி ஒன்றை என் கழுத்தில் கட்டி ஐயா தொங்க விட்டிருப்பது ஞாபகமிருக்கிறதா... இல்லை அதுவும் மறந்து போயிற்றா...?

கேலியும் கிண்டலுமாய் அவள் கேட்க, சட்டென முகம் மலர்ந்த சரவணன், மாலையாய் கழுத்தில் கை கோர்த்திருந்தவளை அப்படியே தன்னோடு இறுக்கி அவள் செவ்விதழ்களில் மென்மையாக முத்தமிட்டவன், அட... ஞாபகமில்லாமலா...? அரவு வரை நீ பொறுத்திருப்பாய் என நினைத்தேன். உனக்கு அவசரமென்றால் இப்போதே... என்றபடி சரவணன் நெருங்கினான்.

அவன் நெருங்க, குங்குமமாய்ச் சிவந்த முகத்துடன் வெட்கம் படர, கண்களை மூடிக் கொண்டாள் அவனது அன்பு மனைவி நிர்மலா!

(முற்றும்)

**நந்தினி** மாத நாவல்

மலர் : 2 இதழ் : 1

வெளியிடுபவர் - ஆசிரியர் :
**எம்.எஸ்.சித்ரா**
அக்ஷயா பப்ளிகேஷன்ஸ்
56/2, ஸ்ரீராம்பேட்டை தெரு. சி.ஐ.டி.நகர், நந்தனம், சென்னை-35.
போன். 044-24361734

கதையில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே. கதையை திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

**Akshaya Novel Monthly**
Owner, Publisher & Editor **M.S. Murugan,**
Published at :
New No. 56/2, Sri Rampet Street, C.I.T. Nagar,
Nandanam, Chennai - 600 035.